Registered No. M. 6063

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி ஆனிமீ 1உ 14—6—1948 ஹிஜ்ரி 1367 ஷாபான்மீ 6உ திங்கட்கிழமை. } இதழ் 21.

## இந்தியாவும், பாலஸ்தீனமும்

—————o—————

வகுப்புத்துவேஷம் குறுகிய மனப்பான்மையை கண்டித்துப் பேசாதவர்களில்லை. அதே சமயத்தில் இந்தியாவின் சீரழிவுக்கு வகுப்புத்துவேஷமே காரணமென்பது மறுக்கப் படாமலிருப்பது ஆச்சர்யந்தான். துவேஷத்துக்கு நிகராக எப்பேர்ப்பட்ட மிஷினும் வேலைசெய்ய முடியாது. வெறுப்புடன் போட்டி போட எந்த சக்தியாலும் முடியுமா! ஒரு கோடி மக்களை வீடுகளிலிருந்து கிளப்ப அரசாங்கமே முயற்சி செய்திருந்தாலும் தோல்வி அடைந்திருக்குமென்பது நிச்சயம் ஆனாலும் துவேஷத்தினால் அசாத்தியம், சாத்தியமாகியிருப்பதுடன், இயற்கைக்கு விரோதமானதொரு விஷயம் இன்று சர்வசாதாரணமாக ஆகிவிட்டது. கோடிக்கணக்கான மக்கள் குடி பெயர்ந்தனர். மின்சார சக்தியால் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு பாறைகள் தூக்கி எறியப்படுவதைப்போல் எறியப்பட்டனர். காமாலை கண்ணனுக்கு எல்லாமே மஞ்சள் நிறமாகத்தென்படும். மனிதனுடைய நோக்கத்தில் துவேஷம் புகுந்தவுடன் உலகமே மாறிவிடுகின்றது. இரண்டும் இரண்டும் சேர்ந்தால் ஐந்து என்பான். வெண்மையை கருமையென்று வாதாடுவான்.

இன்று பாலஸ்தீன் விஷயத்தில் இதே நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. சில முஸ்லிமல்லாத அரசியல் தலைவர்களும் பத்திரிகைகளும் பாலஸ்தீன் பிரச்னையை குறுகிய மனப்பான்மையுடன் வாதிக்க ஆரம்பித்திருக்கின்றனர். வகுப்புவாத தூசி படிவதற்கு இம்மியளவும் இடமில்லாத ஒரு பிரச்னைமீது மண்ணைத் தூவுகின்றனர்.

பாலஸ்தீனம் அரபியர்களின் நாடு இன்றைய ஜனநாயகத்தில் ஒரு நாட்டை ஆளும் உரிமை அந்த நாட்டு மக்களுக்குத்தான் உண்டு. பாலஸ்தீன் பிரச்னை இதைத்தவிர வேறொன்றுமில்லை.

அரபியர்கள் என்றால் முஸ்லிம்கள் என்றும் அவர்களை ஆதரிப்பது முஸ்லிம்களை ஆதரிப்பதாகுமென்றும் சிலர் நினைக்கின்றனர், வகுப்புவாத உணர்ச்சி தலைதூக்கி நிற்கும் இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம்களை ஆதரிப்பது கொஞ்சம் சிரமந்தான்.

உண்மையில் அரபியர்கள் என்றால் முஸ்லிம்கள் என்று அர்த்தமல்ல. பாலஸ்தீனில் அரபு யூதர்கள், அரபு கிருஸ்துவர்கள், அரபு முஸ்லிம்கள் இருக்கின்றனர். ஜாதிமத வித்தியாசமின்றி பாலஸ்தீனம் பாலஸ்தீன மக்களுக்குத்தான் சொந்தம். அதுதான் ஜனநாயகம். வெளியிலிருந்து கொண்டுவந்து குடியேற்றப்படுபவர்கள் முஸ்லிம்களாயிருப்பினும் அல்லது வேறு எவர்களாயிருப்பினும் பாலஸ்தீனை ஆளும் உரிமை அவர்களுக்கு கிடையாது. பாலஸ்தீன அரபுகளை ஆதரிப்பது அங்குள்ள முஸ்லிம்கள், கிருஸ்துவர்கள், யூதர்களை மட்டுமின்றி நியாயத்தையும், ஜனநாயகத்தையும் ஆதரிப்பதாகும். வெளியிலிருந்து கொண்டுவந்து குடியேற்றப்பட்ட யூதர்களை, ஆதரிப்பது அநியாயத்தை ஆதரிப்பது மட்டுமின்றி பாலஸ்தீன் உரிமையாளர்களான யூத, கிருஸ்துவ, முஸ்லிம் பொதுமக்களை எதிர்ப்பதுமாகும். நியாய புத்தியுள்ள எவரும் அப்படிச் செய்யமுடியாது.

துரதிர்ஷ்ட வசமாக லீகர்கள் மீதுள்ள எதிர்ப்பு உணர்ச்சியால் சில இந்திய பத்திரிகைகளும் லீடர்களும் அரபியர்களை எதிர்க்கவும் யூதர்களை ஆதரிக்கவும் முற்பட்டிருக்கின்றனர் அது மட்டுமின்றி ஜனநாயக கொள்கையை பரணிமேல் கட்டிப்போட்டு விட்டு இஸ்ரவேல் ராஜ்யத்தை அங்கீகரிக்கும்படி இந்திய அரசாங்கத்துக்கும் யோஜனை கூறுகின்றனர்.

அகாலிலீடரும், வட இந்திய ரஸ்வியுமான மாஸ்டர் தாராசிங் இஸ்ரவேல் ராஜ்யத்துக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருப்பதுடன் இந்திய அரசாங்கத்தையும் வாழ்த்துச் செய்தி அனுப்பும்படி அழைத்திருக்கிறார்.

பதினைந்து வருஷங்களுக்கு முன் அரபியர்களை தான் ஆதரித்திருப்பினும் இன்று தங்கள் ஆட்சியை ஸ்தாபிக்க மாபெரும் தியாகங்களைச் செய்து வரும் வீரயூதர்களை ஆதரிப்பதாகவும் பிரபல சோஷலிஸ்டு தலைவர் ராம் மனோஹர் லோஹியா லக்னோவில் பேசினார்.

ஒருசில பத்திரிகைகளைத் தவிர அநேகமாக பத்திரிகைகள் எல்லாம் லீக் எதிர்ப்பு உணர்ச்சியால் யூதர்களை ஆதரிக்கின்றன. அரபியர்களை எதிர்ப்பதில் தங்களுடைய எழுத்து வன்மையை செலவிடுகின்றன. "ஆரம்பத்தில் கிடைத்த சில வெற்றிகளால் அரபியர்களின் மூளை கெட்டுப்போய் விட்டது. வெளியிலிருந்து யூதர்களுக்கு உதவிகிடைக்க ஆரம்பித்தபிறகு தான் அரபியர்களுக்கு பஜார்நிலவரம் தெரிய முடியும்" என்று ஒருபத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கின்றது.

"அரபு நாடுகளின் யோக்கிதைக்கு அமெரிக்கா ஒன்றே போதுமானது" என்று இன்னொருபத்திரிகை எழுதுகின்றது.

அமெரிக்க பலம் சம்பந்தப்பட்டவரை அரபு நாடுகளுக்கு மட்டுமின்றி இந்தியா பாகிஸ்தானுக்கும் கூட போதுமென்பது வாஸ்தவமாய் இருக்கலாம். ஆயினும் எதிரியின் மனதைப் புண்படுத்தி பரவசமடையும் குறுகிய மனப்பான்மையைப் பார்த்து பரிதபிக்காமல் இருக்க முடியுமா!

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்தே கிலாபத் போராட்டத்தை நடத்தினர்கள் அந்தப் போராட்டமே தேசிய விடுதலையின் அஸ்திவாரம். பாலஸ்தீனம், எகிப்து பிரச்னைகளில் காங்கிரஸ் எப்பொழுதும் நியாயத்தையே ஆதரித்திருக்கிறது. வெள்ளையர்களின் கொள்கைக்கு சவாலும் விடுத்து வந்திருக்கிறது. துருக்கி சம்மந்தப்பட்டவரை ஹிந்து முஸ்லிம்களுக்கு அபிப்பிராயபேதம் இருந்ததேயில்லை.

பிரிட்டனின் ஜனநாயகத்துக்குபுரம்பான கொள்கையும் அமெரிக்க முதலாளித்துவத்தின் யூக ஆதரவும் பாலஸ்தீனில் அரபியர்களை [யூதர், கிருஸ்தவர், முஸ்லிம்] ஜீவ மரணபோராட்டத்தில் இழுத்துவிட்டு விட்டது. அரபியர்களுக்கு தீங்கிழைக்கப்பட்டிருக்கிறது இந்தியா என்றுமே தீங்கிழைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளித்து வந்திருப்பதற்கு நம் கடந்தகால சரித்திரமே சான்று.

சகோதர சண்டையால் ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பை முன்னிட்டு தங்கள் கடந்தகால அரசியல் சரித்திரம், கொள்கை, தேசிய நலன்கள் எல்லாவற்றையும் அலட்சியம் செய்து விட்டு தேசிய சகோதரர்கள் முஸ்லிம் உலகத்தையே எதிர்க்க முற்பட்டிருப்பது துரதிர்ஷ்டமாகும். சொந்த விவகாரங்களுக்கும் பரஸ்பர அபிப்பிராய பேதங்களுக்கும் ஒரு எல்லையுண்டு அதற்காக கொள்கையை விட்டுக் கொடுத்துவிட முடியாது. இந்திய முஸல்மான்களுடன் இருக்கும் அபிப்பிராயபேதத்தை வைத்துக் கொண்டு பாலஸ்தீனத்தில் அரபியர்களை எதிர்ப்பதும் தேசப்பிரிவினையால் ஏற்பட்ட மனவேதனையின் விளைவாக யூதர்களை ஆதரிப்பதும் சரியல்ல. உயர்ந்த பண்பாடும் சிறந்த நாகரீகமும் கொண்ட ஒரு நாட்டினருக்கு இவ்விதப் போக்கு எவ்விதத்திலும் பொருந்தாது. இந்திய லீகர்களுக்காக பாலஸ்தீன அரபியர்கள் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள முற்படுவது வரவேற்க முடியாத செய்கையாகும். இந்திய வகுப்புவாதத்தை பாலஸ்தீன் தலைமீது சுமத்துவதா!

இந்திய சர்க்கார் இந்தியாவின் பழைய கொள்கையை உறுதியுடன் அனுஷ்டிக்கின்றனர். எகிப்திலிருக்கும் இந்திய ஸ்தானீகர் அறிவித்ததைப்போல் இந்தியா அரபியர்களிடம் அனுதாபம் கொண்டிருக்கிறது. மத்தியகிழக்கு பிரதேசத்தை மூன்றுவது யுத்த அரங்கமாக அமைக்க முயற்சிக்கப்படுவதை தடுக்க பாலஸ்தீனில் அரபியர்களை ஆதரிக்க வேண்டியது இன்றைய நிலைமையில் அவசியமாகும்.

---


## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

— மௌலானா ஆஸாத் —

# சமுதாயக் கல்வித் திட்டம்.

இந்திய சர்க்கார் கல்வி மந்திரியான மௌலானா அபுல் கலாம் ஆஸாத் சமுதாயக் கல்வி, முதியோர் கல்வி முறைகள் அடங்கிய கல்வித் திட்டம் ஒன்றை தேசத்துக்காக சமர்ப்பித்திருக்கிறார். மௌலானா வெளியிட்டிருப்பதைப்போல் முதன்முதலாக டில்லி மாகாணத்தில் மட்டும் அத்திட்டம் பரீட்சிக்கப்படும்

இன்றைய கல்வி முறையை இந்தியாவில் ஏற்படுத்தியவர்கள் கிழக்கிந்திய கம்பெனியார். அவர்களுடைய முறை இந்திய நலனை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை; அந்நிய அரசாங்க இயந்திரம் தாராளமாய் இயங்குவதற்காக அவசியமான உறுப்புக்கள் இந்தியாவில் தயாரிப்பதே அதன் நோக்கமாய் இருந்தது. அதனால் இந்தியாவின் கல்வி ஸ்தாபனங்கள் அனைத்தும் கிளார்க்குகளை உற்பத்தி செய்யும் ஆலைகளாக மாறிவிட்டன.

கல்வியைப் பரப்புவதில் ஆங்கிலேயர்கள் அக்கறையுடன் நடந்துகொண்டனர் என்பது வாஸ்தவந்தான். ஆனால் சமீப காலத்தில் வெளிப்பட்டிருக்கும் ஆங்கில கல்விமுறையின் பயங்கரவிளைவுகளைப் பார்த்த பிறகு ஒவ்வொரு இந்தியனும் எழுத்து வாசனையற்ற பாமரனாகவே இருந்திருந்தால் எவ்வளவோ நலமாய் இருந்திருக்குமென்று மனவேதனையடையாமல் இருப்பதற்கில்லை அந்நிய ஆட்சி பலமடைவதை அடிப்படையாகக்கொண்டு கல்வித் திட்டம் வகுக்கப்பட்டிருந்ததே அதற்குக் காரணம்.

கடந்த பத்து வருஷகால அரசியல் நடவடிக்கைகளையும் ஒரு வருஷமாய் நடந்த கலவரங்களையும் அலசிப் பார்த்தால் இந்தியர்களின் உயிருக்கும் உடைமைக்கும் கல்வி கற்ற பிரகிருதிகள் இழைத்த தீங்கில் நூறில் ஒரு பங்கு கூட எழுத்தறிவற்ற பாமரர்கள் இழைக்கவில்லை என்பது விளங்கும்.

லீக் மேடைகளில் காட்சியளித்த கல்வி கற்ற புண்ணியாத்மாக்கள் தங்களுடைய மூளைக்கோளாறை பாமரர்களின் மண்டைகளிலும் புகுத்தினார்கள். மஹாசபை, சேவக் சங்க அரங்கத்தின் கல்வி கற்ற முன்னணி வீரர்களின் கட்டுப்பாடான சதிகளால் லட்சக்கணக்கான மக்களின் உயிருக்கு உலை வைக்கப்பட்டது. கலகத்திற்கு விதை போட்டு, சமுதாயத்தை சகோதரச் சண்டையில் ஆழ்த்தி, நிர்வாக யந்திரத்துக்குள் புகுந்து, அராஜகம், அமைதியின்மை, பீதி, அவநம்பிக்கையைப் பரப்பி, ராணுவத்தினர், போலீஸாரின் நோக்கங்களையும் மாற்றிவிடக்கூடிய திறமை படிக்காத பாமர மக்கள் எங்கிருந்து அடைய முடியும். ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன் பாமரர்களாய் இருந்துவந்ததாகச் சொல்லப்படும் கல்வி அறிவற்ற இந்தியர்கள் நாலாயிரம் வருஷங்களில் செய்திராத காட்டுமிராண்டித் தனத்தையும், கொடுமையையும் முன்னேற்றமடைந்திருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் இருபதாவது நூற்றாண்டின் கல்வி கற்ற புண்ணியவான்கள் ஒரே மாதத்துக்குள் நடத்திக் காட்டியிருக்கின்றனர். ஆயிரக் கணக்கான துராத்மாக்களை ஒரு தட்டிலும் அன்னிய கல்வியால் மூளை இழந்துவிட்ட ஒரு பிரகிருதியை இன்னொருதட்டிலும் தான் வைத்து தூக்கவேண்டும்.

கள்ளங்கபடமற்ற பாமரமக்களின் மனதைக் கெடுத்து சுயநலத்துக்காகப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளும் கபட நாடக சூத்திர அவதாரிகளான வெறுப்பின்உருவங்கள், கலகம் கலவரத்தைத்தூண்டும் சகுனிகள், சதி, பொறாமையின் ஆணிவேர்கள், வேற்றுமை வகுப்புவாதத்தின் உறைவிடங்களாக இருப்பவர்கள் அனைவரும் கல்வி கற்றவர்களாகத்தான் இருக்கின்றனர். அவர்களுடைய கைகள் நிரபராதிகளின் ரத்தத்தில் தோய்ந்திருக்கின்றன. கல்வியால் ஏற்படும் பலாபலன்கள் இதுதானென்றால் அப்பேர்ப்பட்ட கல்வியை கோடி முறைச் சபிக்காமலிருக்க முடியாது. அந்தப் பாழுங் கல்வி கற்பதைக்காட்டிலும், எழுத்தறிவற்ற பாமரர்களாகவே இருப்பதை ஆயிரம் முறை வரவேற்கத்தான் வேண்டும்.

கிழக்கிந்திய கம்பெனியார் புகுத்திய கல்வி முறையால் சமுதாய லட்சியம் வளர்ச்சியடையவில்லை. விடுதலைக்குப் பிறகு சுதந்திர உணர்ச்சி அடிப்படையில் கல்வித்திட்டம் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் உணர்ந்தார்கள். சுதந்திர இந்தியக் கல்வியின் சூத்திரக் கயிர் கல்வியில் பாண்டித்தியம் பெற்ற நிபுணரான மௌலானா அபுல் கலாம் ஆஸாத் போன்ற அரசியல் அறிஞரின் கையிலிருப்பது தேசத்தின் அதிர்ஷ்டவசமாகும். சில மாதங்களுக்குள் இந்தியாவின் கல்வி முறையில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்த செய்யப்பட்டிருக்கும் முயற்சிகள் அபாரமானவை

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 14—6—'48 திங்கட்கிழமை { இதழ் 21.


## இந்தியாவும், சர்வதேச சூழ்ச்சிகளும்.

பொதுவாக ஆசிய நாடுகளின் விழிப்பையும் இந்திய சுதந்திரத்தையும் பார்த்து ஆசியமக்களை அடிமைப்படுத்தி பல நூற்றுண்டுகளாக அரசியல் பொருளாதாரத்துறைகளில் சுரண்டி வந்த மேல்நாடுகளுக்கு பீதி ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவும், பர்மாவும் விடுதலை பெற்றுவிட்டன. இரண்டாவது மஹாயுத்தத்துக்குப் பிறகு இந்தோ சைனு, இந்தோனேஷியா, ஸிலோன் முதலிய தூரக்கிழக்கு நாடுகளும் ஆப்கனிஸ்தானம், ஈரான், அரபுநாடுகள் முதலிய மத்திய கிழக்கு நாடுகளும் அடைந்துள்ள விழிப்பால் அவைகளை ஜனநாயகப்போர்வையில் சுரண்டிக்கொண்டிருந்த சக்திகளுக்கு கவலை ஏற்பட்டிருக்கிறது. ஆசிய சிறிய நாடுகள் தங்கள் தேவையை தாங்களேபூர்த்தி செய்துகொள்ளும் அளவுக்கு முன்னேற்றமடைந்து விட்டால் அவைகளை சுரண்டல் சக்திகள் மார்க்கெட்டுகளாக உபயோகிக்க முடியாமல்போகும். ஆகையால் மத்திய கிழக்கு, தூரக்கிழக்கு நாடுகளின் சுரண்டல் சம்மந்தப்பட்டவரை சாம்ராஜ்ய சக்திகள் அனைத்தும் ஒத்துழைக்கின்றன. அவர்களுக்குள் எத்தனை தகராறுகள் இருந்தாலும் எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு ஆசியநாடுகளைசுரண்டுவதில் ஒன்றுசேர்ந்து விடுவார்கள் என்பது தெளிவாய்விட்டது. இந்தியாவைக் கூறுபோட்டு பாகிஸ்தான் ஏற்படுத்தியதற்கும் அதுதான்காரணம். பாகிஸ்தானை மார்க்கெட்டாக உபயோகித்து பொருளாதாரச் சுரண்டலை நடத்திக் கொண்டிருக்க முடியும் மேலும் இரண்டு டொமினியன்களிடையே நல்லுறவு ஏற்படவிடாமல் செய்து விட்டால் இயற்கையாக பாகிஸ்தான் மேல் நாடுகளின் தயவையேநாடியிருக்குமென்பது வெளிப்படை. அதற்காக ஒரேகல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்தும் தந்திரம் கையாளப் பட்டிருக்கிறது. இந்தியா, பாகிஸ்தானை சிண்டு முடிந்து விடவும் காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரித்து ரஷ்யாவுக்கு எதிராக தளமாக உபயோகிக்கவுமே படையெடுக்கும்படி மலைஜாதியினர் தூண்டப்பட்டனர் இந்தோனேஷிய மக்களின் சுதந்திரத்தை ஈவிரக்கமின்றி ஒடுக்க நடக்கும் சூழ்ச்சிகள் ஒருவருக்கும் தெரியாமலில்லை. பாலஸ்தீனில் வெளியிலிருந்து பலவந்தமாய் திணிக்கப்பட்ட யூதர்களின் வகுப்புவாத இஸ்ரவேல் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பே அங்கீகரிப்பதில் முந்திக்கொண்ட அமெரிக்கா இந்தோனேஷிய ஜனநாயக வாதிகளின் குடியரசை இதுவரை அங்கீகரிக்கவில்லை. இந்தோனேஷியா டச்சுஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலேயே இருந்தால் அங்குள்ள கச்சா பொருள் உற்பத்தியை சுலபமாக அடையமுடியும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம். அது மட்டுமல்ல. இந்தோசைனுவின் வியட்னும் சர்க்காரும் இதுவரை அமெரிக்காவால் அங்கீகரிக்கப்படவில்லை. அங்கு பிரான்ஸின் ஆதிக்கம் நிலைத்திருக்க வேண்டுமென்பதே அமெரிக்காவின் விருப்பம். இந்தோசைனுவை அடிமைப் படுத்தப் பார்க்கும்பிரான்ஸுக்கு அமெரிக்கஉதவியும் கிடைத்து வருகின்றது. பர்மாவில் சாம்ராஜ்ய சக்திகளுக்கு கல்தா கிடைத்து விட்டபோதிலும் இந்தியாவின் மீது இன்னும் அவை கண்ணோட்டம் வைத்திருக்கின்றன. ஒருசமயம் காஷ்மீர் பிரச்னையை கிளப்புவது; இன்னொருசமயம் ஹைதராபாத்தை தூண்டுவது; காஷ்மீர் கமிஷனை இந்தியாவுக்கு எதிராக உபயோகிக்க சதி செய்வது போன்ற திருவிளையாடல்கள் நடந்து கொண்டு தானிருக்கின்றன. ஆப்கானிஸ்தானம் ராணுவ சூழ்ச்சிகளின் வலையிலிருந்து வெளியேறி விட்டது. ஆயினும் நடைமுறையில் ஈரான்மீது அமெரிக்காவின் கண்ட்ரோல் இருக்கின்றது. இபபொழுது பாலஸ்தீன் யுத்தத்தின் பெயரால் பிரிட்டனும், அமெரிக்காவும் அரபு நாடுகளுக்கு வலை வீசி வருகின்றன இவ்வித சூழ்ச்சிகளிலிருந்து விடுதலைபெற ஆசியாவின் இதர நாடுகள் என்ன செய்யப் போகின்றன என்று சொல்லுவதற்கில்லை. ஆயினும் இந்தியா உசிதமான நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் பொருளாதார அடிமையாக்க விரும்பும் முதலாளித்துவ சக்தி இந்தியாவில் இருக்கத்தான் செய்கிறது. அரசியல் வாதிகள் சிலரும் அந்த சக்தியுடன் ஒத்துழைக்கின்றனர். இந்தியா அதில் அகபபட்டுக்கொண்டால் இதர ஆசிய நாடுகளில் புதிதாகத் தோன்றிவரும் அமைதியின்மையால் அந்த நாடுகள் மட்டுமின்றி இந்தியாவிலும் உள்நாட்டு சண்டை ஏற்படலாம் என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இந்தோனேஷ்யா, இந்தோ சைனுவில் உள்ள தேசபக்தர்களின் சர்க்கார்களிலிருப்பவர்களை கம்யூனிஸ்டுகள் என்று குறை கூறப்படுகிறது. பர்மிய சர்க்கார் கம்யூனிஸ்ட் அல்லவாயினும் கம்யூனிஸத்

துக்கு எதிரிகளுமல்ல. கூட்டு மந்திரிசபை அமைக்க கம்யூனிஸ்டுகளுக்கு அழைப்பும் விடுத்துவிட்டனர். பர்மாவில் எந்த நிமிஷத்திலும் புதியதொரு அரசியல் புரட்சி ஏற்படுவது சாத்தியமே. பர்மியத் தலைவர்களின் புத்திசாலித்தனத்தால் புரட்சி அமைதியாகவே நடந்தேறும் என்பது நிச்சயம். இந்தியாவிலும் அதே போன்ற அமைதியின்மை இருந்துவருகிறது. அதை வெறும் கம்யூனிஸமென்று சொல்லி அலட்சியம் செய்துவிடுவது சரியல்ல. எந்த விஷயத்திலும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஏதாவதொரு காரணம் இல்லாமல் போவதில்லை. இந்தியா அமெரிக்கா, பிரிட்டனை நோக்கி மெதுவாக போய்க்கொண்டிருப்பதாக கம்யூனிஸ்டுகள் சொல்லுகின்றனர். சோஷலிஸ்டுகளுக்கும் இந்த சந்தேகம் இல்லாமலில்லை. இந்தியா பிரிட்டிஷ் காமன் வெல்திலேயே இருந்து பிரிட்டிஷ் அமெரிக்க உதவியைப்பெறவேண்டுமென்றோ அல்லது அவர்களுடைய கோஷ்டியில் சேரவேண்டுமென்றோ சில காங்கிரஸ் வட்டாரங்களிலும்கூட அபிப்பிராயம் நிலவுகின்றது. காமன் வெல்திலேயே இருந்து வருவதைக்குறித்து இதுவரை ஒருவித முடிவும் செய்யப்படவில்லை. இந்தியா எந்த ஒரு கோஷ்டியிலும் சேரப் போவதில்லையென்று பண்டித ஜவஹர்லால் நேரு அடிக்கடி அறிவித்திருக்கிறார். சமீபத்தில் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மஹாநாடு லண்டனில் கூடவிருக்கிறது. அப்பொழுது மேற்கு ஐரோப்பிய யூனியனில் பிரிட்டன் சேர்ந்திருக்கும் பிரச்னை சம்மந்தமாக காமன்வெல்த் மெம்பர்களின் உதவியைப்பெற முயற்சி நடக்கலாம். இந்தியா பிரிட்டனுக்கு உதவிசெய்ய இசைந்தால் ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு ஐரோப்பிய யூனியனை ஆதரிப்பதாகவும் ஆசியநாடுகளை சுரண்டுவதில் மேல்நாடுகளுடன் ஒத்துழைப்பதாகவுமே அர்த்தம் கொள்ளப்படும். சாம்ராஜ்ய சக்திகளின் தகராறுகளிலிருந்து இந்தியா விலகியிருப்பது ஒன்றே இன்றைய சிக்கல்களுக்கெல்லாம் சிறந்த பரிகாரமாக இருக்கமுடியும். அதற்காக அமெரிக்கா, பிரிட்டனுடன் இந்தியா கொண்டிருக்கும் அதேதொடர்பு ரஷ்யாவுடனும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியதவசியம். அந்நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் பிரச்னையைக் குறித்து புனராலோசனை செய்யாமலிருக்க முடியாது பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆயினும் கம்யூனிஸ்டுகள் என்றால் குற்றவாளிகள் என்று நினைப்பது சரியல்ல கம்யூனிஸ்டுகளும் பயங்கர நடவடிக்கைகளை விட்டு தங்கள் திட்டத்தை தெளிவாக்க முன்வரவேண்டிய தவசியம். அன்னிய சக்தியுடன் தொடர்பில்லாமல் உண்மையான இந்திய விஸ்வாசிகளாக மட்டும் நடந்துகொள்ளும் பட்சத்தில் உலகம் முழுவதிலும் இந்தியாவின் கௌரவம் உயருவதற்கு கம்யூனிஸ்டுகள் பெருமளவில் உதவ முடியும். அதனால் இந்தியா நடுநிலைமை வகித்து நாட்டு நலன்களை பாதுகாத்துக் கொள்வதும் வீட்டுப் பிரச்னைகளை சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்வதும் சாத்தியமாகும்.

(மௌலானா ஆஸாத் சமுதாயக் கல்வித் திட்டம் — 3-ம் பக்கத் தொடர்ச்சி.)

மௌலானாவின் சமுதாயக் கல்வித் திட்டத்தால் அரசியல் விழிப்பு ஏற்பட்டு நாட்டின் உண்மையான நிலைமையை மக்கள் உணரமுடியும். ஜனநாயகத்தின் தன்மையை உணர்ந்து ஓட்டுகளின் மதிப்பை தெரிந்துகொண்டு உண்மையான பிரஜைகளாய் தங்கள் கடமைகளை மதித்து நடப்பது சாத்தியமாக இருக்கும். அத்துடன் சுகாதாரம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளுதல் மக்கள் தெரிந்து கொள்ள முடியும். எல்லாவற்றையும்விட பொது மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாய் சகிப்புத்தன்மை, நியாய உணர்ச்சியுடன் பரஸ்பரம் ஒத்துழைத்து நடந்துகொள்வதற்கு வழி பிறக்கும்.

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் கல்வியின் அடிப்படைமாற்றி அமைக்கப்படுவதையே விரும்புகிறார் ஜாதி, மத, வர்க்க, பூகோள பேதங்களின் எல்லைகளைக் கடந்து, மானிட ஒழுக்கத்தை மட்டும் லட்சியமாகக்கொண்டு தன்னையும் மற்றவர்களையும் சரிவர உணர்ந்துகொள்வதற்காக அறிவை செப்பனிட்டு நோக்கத்தில் நேர்மையைப் புகுத்துவதில் மௌலானாவின் சமுதாய கல்வித் திட்டம் உதவி செய்யுமென்பதில் சந்தேகமில்லை. வருங்கால இந்திய சந்ததிகள் வகுப்புவாதக் குட்டையில் விழுந்து துர்மரணம் அடைவதை மௌலானா தடுத்துவிட்டார்.

ஆயினும் கல்வியைக் கற்று பட்டங்களைப் பெற்ற அநேகர் வகுப்பு வாத நரகத்தில் சிக்கி மிலேச்சத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்களை நேர்வழிப்படுத்த ஏதாவதொரு திட்டம் வகுக்கப்படவேண்டியதவசியம். அரசியல் விழிப்பை ஏற்படுத்துவதற்குமுன்னால் மானிட ஒழுக்கத்தைவிழிப்புறச்செய்ய வேண்டும். விஸ்வாஸமுள்ள பிரஜையாக பணியாற்ற தூண்டுவதற்முன் நேர்மையுள்ளமனிதனாக சேவையில் ஈடுபடும்படி செய்வது நன்மைபயக்கமுடியும். நான், நீ என்ற பாகுபாட்டை போக்கி உண்மையான இந்தியன் என்ற முறையில் விஸ்வாசமுள்ள பிரஜையாக மாற்றுவதற்கு முயற்சி செய்யப்படவேண்டும்,

மௌலானாவின் திட்டம் சுதந்திர இந்தியாவின் முன்னேற்றத்தில் எடுத்துவைக்கப்படும் முதல் அடியாகும். தேசம் பூராவிலும் உடனடியாக அமுலுக்குக்கொண்டுவர பொருளாதார வசதி போதிய அளவிற்கு இல்லையென்று மௌலானா அறிவித்திருக்கிறார். அரசாங்கம் திட்டத்தை தயாரித்துவிட்டது. அகில இந்திய ரீதியில் அமுலுக்குகொண்டுவர அதனிடம் பணமில்லை. கல்வியில் அக்கரை கொண்ட முதலாளிகளும், ஸ்தாபனங்களும் கவனம் செலுத்தினால் தேசத்தின் நிலைமை சில மாதங்களுக்குள்ளேயே மாறுதலடைய முடியும்.

# ஆசிரியர் அலறல்!

—( தி. ரா. ஸ்ரீனிவாஸன் )—

**1**

ஐயா கேளும் அடியேன் கதையை
பொய்யா மொழியில் புகல்வேன் நானே

வலங்கை மானில் வருஷக் கணக்கில்
துலங்கிடு மாசிரியர்த் தொழிலே புரிந்தேன்

காலையும் மாலையும் கணக்காகவே
எழு மணி வேலை செய்வதற்கு பதிலாய்

திட்டமில்லாமல் திறமையுடனேயே
வேண்டிய காரியம் விரைவுடன் செய்வேன்

எந்தன் மிடுக்கைக் கண்டு 'கலெக்ட'ரே
விந்தை அடைந்தார் என்றால் இயலாதோ!

இன்னல்கள் எத்தனை ஏற்பட்ட போதிலும்
பின்னமில்லாமல் பொலிவுற எந்தன்

கருமத்தைச் செய்து காலங் கடத்தி
நெறி தவறாமல் வாழும் பொழுது

சிறுகச் சிறுக சம்சாரமும்
பெருகி வளர்ந்து விருத்தியடைந்து

வேண்டா வறுமையும் வந்தடைந்து
வீம்புடனென்னை வாட்டி யெடுத்தது.

**2**

இவ்வாறாகவே இருக்கும் பொழுது
தாவிப் பாய்ந்தன துயராண்டுகளும்

பருவமதானென் பொற்பாவை தனக்கே
திருமணம் முடிக்க துடியாய் துடித்து

என்றும் விடியாத் துயரா யெண்ணி
கொன்று எடுத்தாள் மனையாள் தானே!

கருமத்தை முடித்து மரியாதையாய் வாழ
பொறுமையுடன் யான் திரவியம் தேட

அரை வயிர் கால் வயிர் அன்னம் புசித்தே
ஆயிரம் ரூபாய்கள் அருமையாய்ச் சேர்த்தேன்.

மனையாள் மொழியை இனிதே முடிக்க
இணைத்திடு மருமகனை சென்று கண்டேன்.

அனியாயமனியாயம் யார்தான் சகிப்பார்
கன்னெஞ்சவனும் "கையில் ரூபாயீராயிரமும்

பாங்காய் நகையில் பத்தாயிரமும்
பெண்ணிற்கணிவி" என்றே யுரைத்தான்

தெய்வமே யென்று தேம்பி யழுது
செய்வதறியாமல் திகைத்து நின்றேன்.

**3**

ஏழை யுவனொருவன் என் பெண்ணைக் கண்டு
அழகில் மிஞ்சிய அவளைக் கொண்டான்

தொல்லை விட்டது என்றே யிருக்க
சல்லைகள் செய்ய முனைந்தானவனும்

கிட்டா பொருள்களை கொடுக்கும்படியாய்
சிட்டைகளையே சினந்து வீசுகிறான்!

காசைப் பெரிதென்று எண்ணியே அவனும்
தூஷிக்கின்றான் அதுவுமென் காலம்

பள்ளிப் பிள்ளையும் 'பீஸ்' கொடுவென்று
துள்ளிக் குதிக்கிறான் இங்கே பாரும்!

"ஆதியிலிருந்து அவதிப்பட்டுழல்கிறேன்
மதியுடனெனக்கே அணிகளைச் செய்து

பின்னெந்த செலவையும் பிரியம்போல் செய்யும்
தன்மையாய் சொன்னேன் தடை செய்யாதீர்"

என்றே மனையாளும் பிய்த்துத் தின்னுகிறாள்!
குன்று விளக்கின் வெகு நாள் விருப்பத்தை

களிப்புடன் தீர்க்க வழியறியாமல்
விழிக்கின்றேனே போதுமிவ்வாழ்வு

**4**

ஐந்து வயதினிலே அருமைக் கணவனையிழந்தும்
சிந்தை தளராமல் சுரத்துடன் வளர்ந்தாள்

அருமை சகோதரியும் அவள் தன் பருவத்தை
சீருடன் அணுகி 'மறுமணம் மறுத்த

சாதிப் பந்தத்தை அறிந்திட்ட பொழுது
விதியை நொந்து விழிநீர் பெருக்கியே

கதறியழுவதை கண்டே என் மனம்
சிதறித் தவிக்குதே! சிறுமையுற்றேனே!!

ஆண்களுக்கெத்தனை விவாகம் செய்தாலும்
ஏன்? என்று கேட்க ஒருவருமில்லை

காதல் நெருப்பால் தகித்து வாடும்
மாதரின் உணர்ச்சியை கட்டுப்படுத்த

சாதிக் கட்டுகள் எத்தனையோ உண்டு
போதாக்குறைக்கு வாதுகள் செய்தால்

வாழுமிவ்வாழ்வையும் விலக்கியே வைத்து
தாழ்மைக்குள்ளாக்கி தகித்துக் கொல்லுமே.

இப்பொழுதாகிலும் என்கதி உயர இரக்கங்கொண்டு
இப்புவிதனை மாற்ற ஒரு வகை காண்பீரே!

உங்கள் வியாபாரம் விருத்தியடைய
"ஆஸாதில்" விளம்பரம் செய்யுங்கள்.

# லஞ்ச ஊழல் ஒழிய?

சர்க்கார் ஊழியர்களிடையே லஞ்ச ஊழலும் நேர்மையின்மையும் அதிகரித்திருப்பதை இனி மறைப்பதால் பிரயோஜனமில்லை. இப்பொழுது உச்சஸ்தானத்தை அடைந்திருக்கும் லஞ்சத்தைபோல் இந்தியாவில் இதற்குமுன் இருந்ததாக சரித்திரத்திலேயே காட்ட முடியாது. நூறு உத்தியோகஸ்தர்களை எடுத்துக்கொண்டால் ஏதாவதொரு வழியில் நேர்மை இழக்காமலிருப்பவர்கள் ஒருக்கால் ஒன்றிரண்டு பேர் இருக்கலாம். இன்று லஞ்சம் வாங்குவது கண்ணியமற்ற செய்கையாக கருதப்படுவதில்லை. திறமை, தகுதியென்று பாவிக்கப்படுகிறது போலும். வில்லைச் சேவகர்கள் முதல் மந்திரிகள் வரை இந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். உலவும் வதந்திகளையும் கிடைக்கும் தகவல்களையும் நம்புவதாயிருந்தால் கடந்த பதினெட்டு மாதங்களில் சில மத்திய சர்க்கார் மந்திரிகள் தலா இரண்டுகோடி ரூபாய்க்கு குறையாமல் சம்பாதித்திருப்பதாகவேயூகிக்கவேண்டியிருக்கும். கண்ட்ரோல் விலைக்கு வாங்கிய மோட்டார்களை ஐயாயிரம், ஆறாயிரம் ரூபாய் லாபத்திற்கு சில சட்டசபை மெம்பர்கள் விற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பாக்கெட்டில் பணமில்லாமல் வருஷக்கணக்கில் அலைந்தாலும் இம்போர்ட் டிபார்ட்டுமெண்டில் பர்மிட்டோ, லைசென்ஸோ பெறுவது சாத்தியமில்லை. லஞ்சம் மட்டும் கொடுக்கத் தயாராயிருந்தால் எந்த பொருளுக்கும் மணிக்கணக்கில் பர்மிட்டுகள் வாங்கிவிடலாம். ஒரு காலத்தில் லஞ்சம் சம்மந்தப்பட்டவரை போலீஸ் கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டிருந்தது. இன்று சர்க்காரின் ஒவ்வொரு இலாகாவும் போலீஸுக்கு குருவாய் விளங்குகிறது. நாட்டில் நேர்மையுடன் எந்த ஒரு வியாபாரத்தையும் நடத்துவது இன்று சாத்தியமில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் மற்றவர்களின் நேர்மையை விலைக்கு வாங்கவேண்டும்; அத்துடன் நம்முடைய நேர்மையையும் இழக்கவேண்டும்; இல்லையேல் ஒன்றும் நடக்காது. வெட்கப்படத் தகுந்த இந்நிலையில் இந்திய சர்க்கார் லஞ்சத்தை ஒழிக்க தீவிர நடவடிக்கை எடுத்திருப்பதைக் குறித்து மக்களிடையே நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அநேக இடங்களில் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கப்பட்டிருப்பதை மக்கள் வரவேற்கின்றனர். ஆயினும் லஞ்சத்தை ஒழிக்க அவ்வளவு மட்டும் போதாது. சாதாரண சேவகன் முதல் பெரும் பதவிவரை கடுமையாக கண்காணிக்கப் படாவிட்டால் சர்க்கார் எடுத்திருக்கும் முயற்சிகளின் பலன் நீடித்து நிலைத்திருக்க முடியாது.

அதற்காக பொது ஜன நம்பிக்கையும். அபிமானமும் பெற்ற ஊழியர்களை ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் பொறுக்கவேண்டும். அவர்களுக்கு மாஜிஸ்டிரேட்டுக்குள்ள அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டாலும் நியாயஸ்தலத்தில் சாட்சியம் அளிப்பது சம்மந்தப்பட்டவரை மாஜிஸ்டிரேட்டுகளின் அந்தஸ்துக்கு சரிசமமாக கருதப்படவேண்டும். அதாவது மாஜிஸ்டிரேட்டின் சாட்சியத்தை நம்புவதைப்போல் சர்க்கார் அவர்களுடைய சாட்சியத்தையும்நம்பவேண்டும். அவ்வித ஊழியர்கள் பல்வேறு ஜில்லாக்களுக்கு நியமிக்கப்படவேண்டும். பிரதேச சர்க்கார் ஊழியர்களுடன் தொடர்புகொள்ள சந்தர்ப்பம்இல்லாதவகையில் குறிப்பிட்ட கால அளவுக்குப்பிறகு அவர்கள் வேறு ஜில்லாவுக்கு மாற்றப்படவேண்டும். கோர்ட்டுகள், சர்க்கார்ஆபீஸ்கள், போலீஸ்ஸ்டேஷன்கள். ரயில்வே நிலையங்கள், முதலிய இதர இலாக்காக்களிலிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுக்கும்படிச் செய்து அதை ஏற்றுக்கொள்ளும் உத்தியோகஸ்தனை அதேயிடத்தில் கைது செய்யும் அதிகாரம் அவர்களுக்கிருக்கவேண்டும். குற்றவாளியை தண்டிக்க அவர்களுடைய சாட்சியம் ஒன்றே போதுமானதாக கருதப்படவேண்டும். இவ்வித நடவடிக்கையால் ஒரு வருஷத்துக்குள் லஞ்சத்தை தீர்த்துக் கட்டமுடியும். நேர்மையான தேசீய ஊழியர்கள் மூலம் லஞ்ச ஊழலைத் தடுக்கலாம். இந்த ஏற்பாட்டுக்குப் பிறகு லஞ்சத்தை வாங்குவதற்கு நடுங்குவார்கள் உடனே கைது செய்யப்பட வேண்டியிருக்குமோ என்று அஞ்சுவார்கள். இந்தமுறையை சர்க்கார் அமுலுக்கு கொண்டு வந்தால் நல்ல பலன் கிடைக்க முடியும்.

---

## வாழ்த்தும் பதிலும்

### காயல்பட்டணம்

நம் தமிழ் நாட்டு உத்தம புத்திரரும், நம் தலைவரும், காந்தியடிகளின் உண்மை சிஷ்யருமான ஸ்ரீ C. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் நம் சுதந்திர இந்தியாவின் முதல் வைஸ்ராயாக நியமிக்கப் பட்டமைக்கு பெருமை கொள்கிறோம். அன்னாரின் முதிர்ந்த அறிவும், பரந்த ஞானமும் நாட்டுக்கு சகல துறைகளிலும் நன்மை பயக்குமென்றும், நாட்டில் தற்சமயம் இருந்துவரும் சகல சிக்கல்களும், வகுப்பு துவேஷங்களும் தீர்ந்து நாடு சுபிட்சமடையுமென்று நம்புகிறோம். ராஜாஜி பல்லாண்டு வாழ்ந்து நாட்டிற்கு சேவை செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

எம். கே. காதர்,
தலைவர், செந் நக்ஷத்திர சங்கம்.

**ராஜாஜீ அவர்கள் பதில்:—**

அன்புள்ள M K. காதர், டார்ஜீலிங்,
நுபலாஹால், காயல்பட்டணம். 18-5-48.

"உங்களின் கடிதத்துக்கு மிகவும் நன்றி. என்னின் ஆசியை உங்கள் கிராம மக்களுக்குத் தெரிவியுங்கள்.

# ஜவுளி கட்டுப்பாடு.

நாட்டின் உணவு நிலைமையையும் ராணுவ சப்ளைகளையும் சமாளிப்பதிலிருந்த சிரமங்களை முன்னிட்டு யுத்த காலத்தில் ரேஷன், கட்டுப்பாடு முறையை அரசாங்கம் ஏற்படுத்திற்று கட்டுப்பாடு இருந்த போதிலும் கள்ள மார்க்கெட் என்னவோ உச்ச நிலையில்தானிருந்தது. கள்ள மார்க்கெட் பேர்வழிகளுக்கு அரசாங்க உதவியும் ஓரளவுக்கு கிடைத்துக்கொண்டிருந்ததென்றால் மிகையாகாது. யுத்தம் முடிந்தது; நாடு விடுதலையடைந்தது. நிலைமை திருந்திவர ஆரம்பித்தது. மக்கள் சார்பில் கட்டுப்பாடு நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது.

நாட்டின் அசாதாரண நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படவேண்டுமென மஹாத்மா காந்திஜியும் வற்புறுத்தினார். கட்டுப்பாடு நாட்டுக்கு களங்கமென்றும் அவநம்பிக்கையின் அறிகுறி யென்றும் அபிப்பிராயப்பட்டார். ஜவுளி கட்டுப்பாட்டை முதன் முதலாக நீக்குவதற்கு காந்திஜி யோஜனை கூறினார்

நாட்டின் முக்கிய தொழிற்சாலை முதலாளிகள் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடு நீங்கியபிறகு பொது மக்களுக்கு சுலபமாகத்துணி கிடைக்கமுடியுமென்றும் அரசாங்கத்துக்கும் மஹாத்மா காந்திக்கும் உறுதியளித்தனர். அவர்கள் அளித்த உறுதியின் பேரில் மஹாத்மாஜி யோஜனைக்கிணங்க இந்திய அரசாங்கம் ஜவுளியின்மீதிருந்த கட்டுப்பாட்டை நீக்கிவிட்டது பம்பாய் அஹமதாபாத்திலுள்ள சில தொழிற்சாலை முதலாளிகள் சாத்தியமான அளவுக்கு விலைகளை குறைக்கப்போவதாக அறிக்கை வெளியிட்டனர். பொதுமக்களுக்கு அதனால் திருப்தியேற்பட்டது.

கட்டுப்பாடு நீங்கிற்று. உடனே வியாபாரிகளும் தொழிற்சாலை முதலாளிகளும் கூத்தடிக்க ஆரம்பித்து விட்டனர். ஜவுளி விலைகள் நாளுக்கு நாள் விஷம் போல் ஏற ஆரம்பித்தன. முத்திரை குத்தப்பட்ட விலைக்குமேல் 200% பொதுமக்களிடம் வசூலிக்கப் பட்டது. தொழிற்சாலை முதலாளிகளை சர்க்கார் பன்முறை எச்சரித்தும் பலன் ஏற்படவில்லை. விலைகள் ஏறிக்கொண்டே போயின. பொதுமக்களும் சர்க்காரும் சகிக்கமுடியாத அளவுக்கு ஏறின.

ஒரு நாட்டின் கௌரவத்தை அங்குள்ள வியாபாரிகளின் நேர்மையைக்கொண்டே அளவிடவேண்டுமென்று இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரபல ஜெர்மன் பொருளாதார நிபுணர் ஒரு காலத்தில் அபிப்பிராயம் தெரிவித்தார். இந்திய வியாபாரிகளை அளவுகோலாகக் கொண்டு இந்தியாவை அளவிட்டுச் சொல்லவேண்டுமாயின் முடிவு விசனிக்கத் தகுந்ததாகவே இருக்கும்.

நம்முடைய வியாபாரிகள் கள்ள மார்க்கெட் மூலம் பொதுமக்களை கொள்ளையடித்தும், சர்க்காருக்கு வரி கொடுக்காமல் ஏமாற்றியுமிருக்கின்றனர் என்பது வருந்தத்தக்க உண்மையாகும். அன்னிய ஆட்சியில் இதைக் குறித்து எவ்வித அபிப்பிராயம் இருந்திருந்த போதிலும் தேசிய அரசாங்கத்தில் இவ்வித காரியங்களை தேசத் துரோகம் என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கு படிப்பினைக்குரிய தண்டனை விதிக்கப்படவேண்டும்

“பாரத நாட்டின் உயர்வை அளவிட அதில் எத்தனை பேர் நேர்மை உள்ளவர்கள் இருக்கின்றனர் என்று பார்க்க வேண்டியதவசியம். ஒழுக்கத் துறையில் நாடு முன்னேறுகின்றதா அல்லது பின்னோக்கிச் செல்லுகின்றதா என்பதேமுக்கியம்” என்று பண்டித நேரு பன்முறை அறிவித்திருக்கிறார். வியாபாரிகள் சங்கக்கூட்டத்தில் பேசும்போதும் இதே அபிப்பிராயத்தை வெளியிட்டார். “பணத்தைமட்டும் லட்சியமாகக்கொள்ள வேண்டாம். முதலாளித்துவத்துக்கு கௌரவமிருந்த காலம் மலையேறிவிட்டது நீங்கள் முயற்சித்தால் தேசிய புனர்நிர்மாண வேலையில் எவ்வளவோ உதவிசெய்யமுடியும்” என்று பண்டித நேரு அவர்களுக்கு ஆலோசனையும் கூறினார்.

பண்டித நேருவின் போதனையை ஜவுளி வியாபாரிகள் புறக்கணித்துவிட்டதாகத் தெரிகிறது. சில தினங்களில் நிலைமை திருந்திவராவிடில் கடுமையான நடவடிக்கையெடுக்கவேண்டிவரும் என்றும் ஸ்டாக் ஜவுளியை எடுத்துக்கொண்டு சர்க்காரே பொது மக்களுக்கு விநியோகிக்க வேண்டியிருக்குமென்றும் நோட்டீஸ் கொடுக்கவேண்டிய அளவுக்கு வியாபாரிகள் போய்விட்டனர். இது வருந்தத்தக்க நிலைமையாகும்.

பொதுவாக தொழிற்சாலை முதலாளிகளின் போக்கு உலகத்துக்குத் தெரியும். ஆயினும் தங்கள் தவறான போக்கால் நாட்டுக்கும் சர்க்காருக்கும் ஏற்படக்கூடிய கெட்ட பெயரை உணர்ந்து பார்க்க வேண்டியது அவர்கள் கடமை. திரும்பவும் ஜவுளிக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டால் மஹாத்மாஜீயின் ஆத்மா வேதனை அடையுமென்பதை ஞாபகத்தில்

# கல்நெஞ்ச அரசியல் வாதி.

மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர் ஜனப் A M. அல்லாபிச்சை பத்திரிகைகளுக்கு கீழ் வரும் அறிக்கை வெளியிட்டுள்ளார்:—

காய்தே ஆஜம் ஒரு கல் நெஞ்சம் படைத்த அரசியல் வாதி. தனக்காக பாகிஸ்தான் அடைய முற்பட்டபோது இந்திய யூனியன் முஸ்லிம்களின் எதிர்காலம், நிம்மதியைப்பற்றி ஒரு வினாடிக்கேனும் அவர் சிந்தித்துப் பார்க்கவில்லை. ஏற்கனவே இந்திய முஸல்மான்களுக்கு செய்திருப்பதைக் கொண்டு அவர் திருப்தி யடையவில்லைபோலும்

குழப்பத்தை உண்டாக்கி அதன் மூலம் இந்தியாவைப் பலஹீனப்படுத்தும் நோக்கத்துடன் இப்பொழுது ஹைதராபாத்தை அழைக்கின்றார். தன்னுடைய நோக்கத்துக்காக இந்திய முஸ்லிம்களை பலியிடுவதற்கும் அவர் தயங்கமாட்டார். இந்திய யூனியன் முஸ்லிம்கள் புத்திசாலிகளா யிருந்தால், யூனியன் முஸ்லிம்களுக்கு துரோகம் செய்திருப்பதாக நான் மனப்பூர்வமாய் மதிக்கும், கல் நெஞ்சம் படைத்த அரசியல் வாதியை எதிர்த்து நிற்க வேண்டும் காய்தே ஆஜமைப் பின்பற்றி தவறிச் செல்ல வேண்டாமென்று ஹைதராபாத் முஸ்லிம்களின் தலைவரை கேட்டுக்கொள்கிறேன் நேர்மையாக நடந்துகொண்டால் கடந்த காலத்தில் மக்கள் உள்ளங்கள்மீது ஆட்சி செலுத்தியதைப் போலவே இனியும் உள்ளங்களை ஆளமுடியும். ஹைதராபாத் தன்னுடைய கவுரவம் சம்மந்தப்பட்ட சில பிரச்னைகளைக்குறித்த நிபந்தனைகளுடன் இந்திய யூனியனுடன் சேருவதன்மூலம் ஹைதராபாத் தனக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் சேவை செய்யலாம்.

நம்முடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமான பண்டித ஜவஹர்லால் நேருவை நாம் பலஹீனப் படுத்தாமலிருக்க வேண்டும். அவருடைய கைகள் நம்முடைய நலன்களைப் பாதுகாக்கின்றன காங்கிரஸ் பின்னுக்குத் தள்ளப்படுவதால் ஹிந்து மஹாசபையும் இதர முஸ்லிம் எதிர்ப்பு ஸ்தாபனங்களும் முன்னணிக்கு வந்துவிடும். அங்கிலையில் இந்தியா ஒரு பாலைவனமாகத்தான் இருக்கும்.

வைத்துக்கொள்ளவேண்டியதவசியம். இந்தியாவின் ஆத்மா சாந்தி இழக்கும்படி நடந்துகொள்வது பாபமாகும். அத்துடன் ஜவுளி தொழிற்சாலை முதலாளிகளும் பெரிய வியாபாரிகளும் தங்களுக்கு ஏற்படக்கூடிய களங்கத்தைப் போக்கிக்கொள்ள நேர்மையுடன் நடந்துகொள்ளவேண்டும். இந்திய சர்க்கார் தொழில் முன்னேற்றக் கொள்கையில் பிரைவேட் மூலதனத்துக்கும் போதுமான வசதியளித்திருக்கிறது. ஜவுளிப் பிரச்னையில் தொழிற்சாலை முதலாளிகள் நம்பிக்கை இழக்கும் விதத்தில் நடந்துகொள்வதால் இதர தொழிற்சாலைகாரர்கள் மீதும் அவநம்பிக்கை ஏற்படுவது சகஜம். அதனால் முதலாளிகளுக்கு நன்மை ஏற்படமுடியாது. ஜவுளி வியாபாரிகளும் தொழிற்சாலை முதலாளிகளும் விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கையை சரிவர உணர்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியமில்லாமல் ஜூன் 15-ந்தேதிக்குள் நிலைமையை சீர் செய்யவேண்டும். ஜவுளி விலைகள் இறங்கிவிட்டன. பாட்டாளி மக்களுக்கு எவ்வித சிரமுமின்றி குறைந்த விலையில் துணி கிடைக்கின்றது. இனி கட்டுப்பாடு அவசியமில்லை யென்று பொதுமக்கள் சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும். பொருளாதார புரட்சி எண்ணம் நாளுக்கு நாள் வேகமாய் வளர்ந்து வரும் இச்சமயத்தில் முதலாளிகள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டியதவசியம்.


## "ஆஸாத்"

### (தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

தற்கால அரசியல் அறிவு வளர்ச்சி யடைய அவசியம் படிக்கவேண்டும். சிக்கலான அரசியல் உலகத்தில் இன்று 'ஆஸாத்' சமூகத்தை நேரான பாதையில் முன்னேறச் செய்கிறது. சொற்ப காலத்தில் புது அரசியல் உணர்ச்சியை எங்கும் உண்டாக்கியிருப்பதை தாங்கள் கவனித்திருக்கலாம். உங்கள் ஊரில் 'ஆஸாத்' ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. 'ஆஸாத்' சந்தாதாரர்களாக ரூ. 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்,
"ஆஸாத்"
கும்பகோணம்.

# "உழுபவனுக்கே நிலம் சொந்தம்"

—( K. R பசுபதி, கரூர் )—

கடினமான பூமியில் ஏர் கட்டி உழுது, பச்சைசப் புல்லெடுப்பி, பார்க்கும் கண்ணும் கருத்தும் களிக்கச் செய்பவன் உழவன்.

உடைந்த ஏர் கலப்பை; கட்டாந்தரை ஓட்டை வண்டி; ஒரு சின்ன சாட்டை; சண்டிமாடு; சகதி நிறைந்த பாதை; மேனியிலே புழுதி; கலங்கிய கண்; கவலைதோய்ந்த முகம்; நெற்றியிலே சிந்தனை ரேகைகள்; காலைக் கட்டியுள்ள சில சிறு குழந்தைகள்; சரியாக வேயப்படாதகூறைவீடு; கூழிட்டு வாழ்வில் பங்கெடுக்கும் மனைவி; திண்டாடும்வாழ்வு; இவை உழவன் வாழ்வில் பின்னிக்கிடக்கும் அம்சங்கள்

இவ்வளவு துன்பத்திலே தவிக்கும் உழவனை உலகிலே பெரு மகனென, தாய் போன்றவனுகக் கருதி, குழந்தைபோன்ற களிப்பிலே, ஏற்றி, போற்றி எடுத்துக் கவிதையும் தீட்டிவிட்டனர்,

"பயிர் செய்வான் வாழ்க்கையே பாங்கு; மற்றெல்லாம் அயல் சார்ந்த சேவகமேயாம்" "ஒரு பயிராக்கி யுணவீவான் பாரிற் பெருமகனென்று பேசு" என்றெலாம் எழுதிவிட்டனர்.

இப்படி பாடல் பெற்ற பெருமகனுர்கள், ஊராருக்கு உழைத்துத்தினைத்து உருமாறி ஒடாகிருர்கள். செங்குருதி சிந்தி செங்கதிர் மணிகளைக் கப்பீரமாக்கி, களித்துத் தென்றலிலே ஆடும் கதிர்களை, சிருஷ்டி செய்த அமுதக்கரங்கள், ஆண்டவனை நோக்கிக் கூப்பியுள்ளன. ஒருவேளை ஒழுங்கான உணவுக்காக! இது இப்பொழுது!

ஒரு காலத்தில் தொழில் வளம்பெற்று இருந்தது, ஆனுல் தொழிலாளி தவித்தான். இன்று தொழிலும் வளமில்லை; தொழிலாளியின் வாழ்வும் வளமில்லை; குளம் குட்டைத் தேடுகின்ருன் வாழ்வை முடித்துக்கொள்ள. இது இப்பொழுது நடைபெறுவது. உழைக்காதவன் ஊராள்கிருன், உயர்மனையில் வாழ்கின்ருன்; ஊரார உறிஞ்சுகிருன்; உத்தமர் மாநாட்டுக்கு பிரதிநிதியாக வேறு போகிருன்! நெற்றி வியர்வை விழ பாடுபடும் மனிதன், பிறர்க் களித்து, பாங்குடன் வாழச்செய்து, தான் மட்டும் பரமனை நினைந்து பட்டினி இருக்கிருன்! இந்த அகண்டமான வர்க்கப் பிரிவுதான் இன்றைய சமுதாயச் சரிவுக்குக் காரணம். இதைக் களையவேண்டும்.

தனிப்பட்ட மனிதனின் பராமரிப்பில், சொந்தத்தில் ஏராளமான ஏக்கர்கள் இருப்பதால் உற்பத்தி குறையும்; நிலங்களும் கவனிக்கப்படாமல் தரிசாகும்; உணவின்றி பெருகிவரும் சமுதாயம் துன்பப்படும். இதன் காரணமாக பல ரக போராட்டங்கள் ஏற்படும்: சமுதாய சமாதானம் சீர்குலையும்; ஏர் முடங்கினுல், பார்மடங்குமல்லவா! இம்மாதிரி நிலங்கள் ஒரு சில மனிதரின் ஏக போக உரிமை வளையத்தில் இருப்பதின் காரணமாக, இன்று இந்த நாட்டில் 1/3 பாக மக்களுக்கு மேல் தங்களது உணவைச் சரியாகப் பெறுவதேயில்லை. இந்த நிலையில் சமாதானம் ஏது? ஏழு லக்ஷம் கிராமங்களில் நடக்கும் உழவு இலக்ஷணம் மகா கேவலமானது பழய பத்தாம் பசலி ஏர்கலப்பை; அதைத்தரும் முதலாளியே உடைந்ததை, பழசைத்தருகிருன். எப்படி விவசாயம் உயரும். இந்த நிலையை ஒழித்து பூமியை வளப்படுத்தல் வேண்டும்.

உலகின், இந்தியாவின் பொருளாதார நெருக்கடி, உணவு உற்பத்திக்குறைவு நெருக்கடி, பல லக்ஷோப லக்ஷமக்களை வேலையில்லாத் திண்டாட்டப் படுகுழியில் தள்ளி வறுமைப்பிணியிலாழ்த்தி, பட்டினிப் பசியால் வாடி, வதங்கி, சோபிதமற்று, ஜீவனற்று இருள் நரகத்தில் ஆழும்படி ஆக்ஞையிட்டு விட்டது விவசாய நெருக்கடி, சவங்களை சிருஷ்டிக்கின்றது. இவையொழிய இயந்திரத்தொழில் வளர்ச்சியும், உழவுக்கு நவீன சாதனங்களும் உபயோகப் படுத்தவேண்டும். இல்லாவிடில், தொழிலாளவர்க்கத்தின் வெறுப்பு, பெரும் புரட்சியாக மாறும். நவீன இயந்திரங்களை உபயோகிப்பதால், பால் தரும் பசுக்கள் காப்பாற்றப்படும். இதில் உழைக்கும் மனிதர்கள் தொகை குறையும். இவர்களை நாட்டில் மலிந்து கிடக்கும் பலவேலைகளுக்கு அரசியலார் உபயோகப் படுத்திக்கொள்ளலாம்.

இன்றுள்ள குத்தகை நிலைமையைப் பற்றிச் சொல்லப்போனுல் "நிலச் சுவாந்தாரும், குத்தகைக்கு வாங்குபவனின் சுரண்டும் திறமையை விளக்கும் முறையின்றி வேறில்லை."

மிட்டா மிராசுகளின் மமதையொழிய, குடியானவன் களிக்க, தொழில் வளம்பெறுக, சமுதாயம் சாந்திபெற, நிலத்தை உழுபவனுக்கே சொந்தமாக்க வேண்டும். இது காந்தீய வழி.

கடந்த, புராணங்களைப் படிக்கும்போது அந்தந்தக் கிராமங்களில் உள்ள நிலங்கள், கிராமங்களுக்குச் சொந்தம். அதில் வரும் வருமானம் அந்த கிராமிய மக்கள் பங்கிட்டுக்கொள்வர். 1/6 பாகத்தை அரசருக்கு வரியாக வழங்குவர். இம்மாதிரி ஸ்திர

மான கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தி, கூட்டுறவு கடைகளை ஏற்படுத்தி சம, சரியான முறையில் விநியோகம் செய்யவேண்டும். இதற்கு உழுபவருக்கே நிலம் சொந்தமாக்கப்படல் வேண்டும்.

கூட்டுப் பண்ணை முறை நிறுவுதல் என்பது மிராசு ஒழிவது என்றுதான் பொருள். கூட்டுப் பண்ணை என்பின், விவசாயிகளைக் கூட்டாகச்சேர்த்து வேளாண்மை செய்வதே. இதன் பிரிவு கோ-ஆபரேடிவ் சொஸைடிகள். இது உடனடியாகச் செய்தல் இயலாது. கிராமம் கிராமமாக, ஜில்லா ஜில்லாவாக படிப்படியாகக் கூட்டுமுறையில் சேரச்செய்யவேண்டும். இதற்கு முதல்வேலை நஷ்ட ஈடின்றி ஜமீன்தாரி ஒழிப்பு; இதைத்தொடர்ந்து மிராஸ்தார்கள் ஒழிப்பு. இது பூர்த்தியானால், உடனே உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்றகோட்பாடும் பூர்ணத்வம் பெறும்.

இம்மாதிரி கூட்டுப் பண்ணை முறைகளை உழைப்பவனுக்கு நிலம் சொந்தமாக்கும்முறை சுமுகமாக போராட்டமின்றி தீர்த்து விடமுடியாது. இது ஒரு நியாயப்போர். மிராஸ், ஜமீன்களை எதிர்த்துப் போர். உதாரணமாக, நமது சென்னை அரசியலார் தியாகிகளுக்கு 5ஏகர் என்று கூறியுள்ளார்கள். அதில் கூட்டுப்பண்ணை அமைக்கப் போகிறார்கள். கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யும்போது பல மிராஸ்கள், சொந்த நிலம் வைத்துள்ள "குலாக்குகள்" இவர்களிடம் மோதவேண்டியிருக்கும். கூட்டுறவு முறையில் வேலைசெய்யும் தியாகிகளுக்கு விவசாயத்துக்கு வேண்டிய கால் நடைகளையும், ட்ராக்டர்களையும் அரசாங்கமே தரவேண்டும். கூட்டுறவுப் பண்ணையே அரசாங்கப் பண்ணையாக வேண்டும். ஆனால், மிராசுகளுக்குப் போதுமான ட்ராக்டர்கள், கூலிகள், கால் நடைகள் கிடைக்கும். இந்த சமயம் கூட்டுப்பண்ணைக் காரர்களுக்கும், மிராஸ்களுக்கும், தகராறு விளையும். சமாதானம் குலையும். கூட்டுப் பண்ணைக்கு விரோதமான தனிமிராஸ்கள் இருந்தால் வர்க்க வித்தியாசமும், மனக்கசப்பும் போராட்டமும் ஏற்படும். இந்த நிலைமாறி, தியாகிகள் பெறும் நிலங்களில் கூட்டுப்பண்ணை முறையில் விவசாயம் வர்க்கப் போராட்டமின்றி அமைதியாக நடைபெற மிராஸ்கள் எதிர்ப்பை உடைத்தெரிய மிராஸ்களை ஒழிப்பது. அதாவது உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்குவது தவிர வேறு முறையில்லை. 5.ஏக்கர்தரும்போது சர்க்கார் இதை சிந்திக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இம்மாதிரி கூட்டுறவு முறைகள் பல தனி மனிதர்கள், குலாக்குகளால் தோல்வி பெற்றுள்ளன என்பதுவும் நன்கறிந்த விஷயமே. தியாகிகளுக்கு தரும் 5.ஏக்கர்களில், கூட்டுறவு முறையில் தியாகிகளே கூலிக்கு ஆளமர்த்தாமல் உழும்படி செய்தால் உற்பத்தி ஏராளமாகப் பெருகும். உழவும் சிறக்கும். "இதுவே உண்மையில்" உழுபவனுக்கே நிலம் சொந்தம்என்ற காந்தீயசோஷலிசத்தின் ஜீவன். லாபத்தில் பங்கிடுதலில் மாத்திரமல்ல; ஏர் பிடித்து உழுவதிலும் தியாகிகள் பங்கு கொள்வார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். இது ஒரு பெரியபுரட்சி சமுதாயத்திலே. இதுவே காந்தீய சோஷலிசம்.

இந்த புரட்சிமிராஸ்களின், குலாக்குகளின் ஜமீன்களின் கீழ் சுதந்திரமின்றித் தவித்து வந்த பண்ணையாட்களுக்கு விடுதலையளிக்கின்றது.

இந்த புரட்சி சுரண்டும் வர்க்கத்தை ஒழிக்கும் புரட்சி. முதலாளித்வத்தை ஒழிக்கும் புரட்சி. பாட்டாளி வர்க்கத்திலே பெரும்பான்மையான விவசாயிகளின் விடுதலைப் புரட்சி. நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் உழவனுக்கு நிலம் சொந்தமாக்கும் புரட்சி. மாக்ஷிமை பொருந்திய தனிச் சொத்துரிமையை ஒழிக்கும் புரட்சி. "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்ற தேசீய சித்தாந்தத்தை, காந்திஜி அவர்களின் அருமையான கருத்தை, சோஷலிச நாட்டை சிருஷ்டிக்கும் உண்மையை, நாட்டிலே நாட்டுவதே பலவித நெருக்கடியான பிரச்னைகள் தீர வழி.

விவசாய இலாக்காக்கள் ஏற்படவேண்டும். பலவித புதிய முறைகள் கண்டுபிடிக்கவேண்டும். ஆண்டொன்றுக்கு இவ்வளவுவிளையவேண்டும் என்று திட்டமிடவேண்டும். இவ்வுண்மை பதிய அறியாமை போகவேண்டும். பள்ளிகள் பல்லாயிரம் தோன்ற வேண்டும். தொழிலாளி, விவசாயிமக்களின் சுபிக்ஷ வாழ்க்கைத் தரத்தையும், கலாச்சாரத்தையும் பன்மடங்கு உயர்த்த "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்ற சித்தாந்தம் நடைமுறையில் வரவேண்டும். உழவனும் தொழிலாளியும் நாட்டின் இரு கண்கள்.

"கடினமான தரையில் ஏர்கட்டி உழுவாரிடமும் சாலையமைக்க சரளைக்கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கின்றான். அவன் கடவுள் அவர்களுடன் மழையில் நனைகின்றான். வெயிலில் உலர்கின்றான். அவன் ஆடையில் தூசி படிந்துள்ளது உன் காஷாயத்தை களைந்தெறி, அவனைப்போலவே நீயும்புழுதியில் இறங்கிவா!" என்று உழவனிடமும் தொழிலாளியிடமும் கடவுளைக் காண்கின்றார்; களிக்கின்றார். குருதேவர், ரவீந்திரர். ஆம்! உழுபவனுக்கே நிலம் சொந்தம்" இந்த காந்தீயம் உலகமெங்கும் ஒலிக்கட்டும். விண்ணளாவட்டும் இந்தக் குரல் "உழுபவனுக்கே நிலம் சொந்தம" என்ற காந்தீயம் வாழ்க! நாட்டின் முப்பதுகோடி குரலும் இதை ஒருமிக்கக் கூவட்டும் "உழுபவனுக்கே நிலம் சொந்தம" "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" "தனி உடமை ஒழிக" காந்தீயம் மலர்க!

# முகலாய நீதி.

மாவுத்தன் என்ன செய்வான்! தெரு ஓரத்தில் விளையாடும் குழந்தை துள்ளிக் குதித்து யானையின் காலடியில் வந்துவிழப்போவதை அவன் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும். அப்படியும் எவ்வளவோ சாமர்த்தியமாய் சமாளித்து யானையை வேறுதிக்கில் திருப்பியே விட்டான். பீதியடைந்திருந்த குழந்தையோ! விலகி ஓடுவதற்குபதில் திரும்பவும் யானைக் காலிலேயே வந்து விழுந்தது. அபாயத்தை தவிர்க்க மீண்டும் முயற்சிப்பதற்குள் யானை எடுத்த அடியை குழந்தைமேல் வைத்து விட்டது. ஒரே ஒருலேசான அலறல்! கசங்கிய மலரைப்போல் நசுங்கிய குழந்தையின் பிணம் தரையோடு தரையாய் கிடந்தது

தங்க அம்பாரியில் பட்டுத்திரைக்குள் ஆடம்பரமாய் உட்கார்ந்திருந்தான் ஸைபுல்லா ஷாஹ். வங்காளத்தைப் போன்ற பெரியதொரு மாகாணத்தின் சுபேதாராக இருந்தாலுமென்ன! அவனும் மனிதன்தானே. பையனுடைய பரிதாபகரமான அலறல் அவனுடைய உள்ளத்தையும் உருக்கி விட்டது.

மின்னல் வேகத்தில் அம்பாரியிலிருந்து குதித்தான். குடிசையை அடைந்து குழந்தையின் பெற்றோர்களுக்குத் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டான். கூட்டம் கூடி விட்டது.

"நியாயம்! நீதி! பழிக்குப்பழி! மாவுத்தனையும் யானைக்காலில் கொடுத்தாக வேண்டும்!" என்று கத்திக்கொண்டு கூட்டம் மாவுத்தன்மீது பாய்ந்தது. ஸைபுல்லா அமைதி ஏற்படுத்த வெகுவாக முயன்றும் பலனில்லை. கூட்டத்தினரின் நோக்கத்தை அறிந்த சிப்பாய்கள் மாவுத்தனைபாதுகாத்துக் கொண்டார்கள்.

ஸைபுல்லா உரத்த குரலில் பேசினான். "இதில் மாவுத்தனுடைய குற்றமென்ன? நீங்களே சிந்தித்து முடிவு செய்யுங்கள். அவன் இருமுறை முயற்சித்தான். தெய்வசங்கல்பம் நடந்தேறியே விட்டது. எப்படியிருப்பினும் நீங்கள் திருப்தியடையும் வகையில் உங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படும்."

"பணத்துக்காக பையனை விற்கமுடியாது. மாவுத்தனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும். அதுதான் எங்களுக்கு திருப்தியளிக்கமுடியும்." கூட்டம் பதிலளித்தது.

"உங்களால் நியாயம் வழங்கப் படாவிட்டால் சக்கரவர்த்தியிடம்நாம்முறையிடவேண்டியிருக்கும்." பையனுடைய தகப்பன் மிரட்டினான்.

வங்காள சுபேதாரை ஒரு சாதாரண கிஸான் மிரட்டுவதா! ஸைபுல்லாவின் முகம்சிவந்தது. "சவாலை ஏற்கத் தயார்" என்று பதிலளிக்கும் தோரணையில் கூட்டத்தை நோக்கிப்பேசினான். "என்னுடைய பதினெட்டாவது வயதில் சக்கரவர்த்தி என்னை இந்த மாகாணத்தின் சுபேதாராக நியமித்தார். மிகவும் நியாயமான முறையில் உங்களை நிர்வகித்ததாகவே நம்புகிறேன். இதுவரை நியாயத்துக்குமாறாக நான் நடந்து கொண்டதாக யாராவது நிரூபிக்க முடியுமானால் அவர்கள் முன் வரலாம்." ஒருவரும் முன்வரவுமில்லை. பதிலளிக்கவுமில்லை.

"அப்படியானால் உங்களுக்கு நியாயம் வேண்டாம்? பிடிவாதத்தையே விரும்புகிறீகள்!" ஸைபுல்லா ஏளக்காரமாய் பேசினான்.

ஸைபுல்லா அம்பாரியில் ஏறி அமர்ந்ததும் மாவுத்தன் அங்குசத்தை எடுத்தான். கூட்டத்தில் அமையின்மை பரவிற்று "பழிக்குப்பழி" என்ற கோஷங்கள் கிளம்பின. மாவுத்தன்மீது தடிகள் வீசப்பட்டன சிப்பாய்கள் குறுக்கிட்டு கூட்டத்தைக் கலைத்தனர். கவலை தோய்ந்த முகத்துடன் பெற்றோர்கள் இருவர் மட்டும்நின்று கொண்டிருந்தனர். அருமைமகனுடைய நசுங்கிய பிணம் அவர்களுக்கு முன்னால் கிடந்தது.

ஸைபுல்லா திரும்பிப்பார்த்தான். அவனுடைய குரலில் இரக்கம் தொனித்தது.

"உங்களுடைய மனவேதனையின் அளவை நான் உணராமலில்லை. ஆயினும் இதில் மாவுத்தனுடைய ஒரு குற்றமும் இல்லை. அவன் என்ன செய்திருக்க முடியுமென்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்."

"பழிக்குப்பழி" கிஸான்கத்தினான்.

ஸைபுல்லாவின் உத்திரவால் யானை புறப்பட்டது சிறிதுநேரத்தில் பர்துவான் ராஜமாளிகையில் நுழைந்து விட்டது. மாளிகை கதவுக்குவெளியே குழந்தையின் பிணத்தை வைத்துக் கொண்டு பெற்றோர்கள் உட்கார்ந்து விட்டனர். அந்தி மயங்கி இரவும் கழிந்தது. மறுநாள் காலையிலும் அவர்கள் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தனர். ஸைபுல்லா அவர்களை தர்பாரில் கூப்பிட்டான்.

"நீங்கள் என்னதான் விரும்புகிறீர்கள்?"

"பழிக்குப்பழி."

"நான் உங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகச் சொன்னேன். அனுதாபம் தெரிவித்தேன். ஆயினும் நியாயமற்ற அசாத்தியமான ஒன்றை நீங்கள் கோருகிறீர்கள்"

"நியாயம் வழங்க உங்களால் முடியாவிட்டால் ஜஹாங்கீர் சக்கரவர்த்தி நமக்கு நியாயம் வழங்குவார். நாம் அவரிடத்தில் போய் முறையிடுவோம்"

கிஸானுடைய துணிச்சலைப் பார்த்து தர்பாரிலிருந்த அனைவரும் பொறுமை இழந்து விட்டனர். "ஹுஜூர்! பத்து ரூபாய் கூடப்பெறாத இந்த கிஸானுடன் பேரம் பேசுவதா!" என்றான் ஒரு தர்பாரி.

இதைக்கேட்ட ஸைபுல்லாவுக்கும் ஆவேசம் உண்டாயிற்று. "அற்ப நாய்களா!............ இராணி நூர்ஜஹான் மடியிலே வளர்ந்தவன்! மேலும் இந்த மாகாணத்தின் சுபேதார்! என்னையா மிரட்டுகிறீர்கள்!" ஸைபுல்லா சிப்பாய்களை திருப்பிப் பார்த்தான். "இவர்களைப் பிடித்து சிறைக்குள் தள்ளுங்கள். தங்கள் துணிச்சல், முட்டாள்தனத்தைப் பற்றி சிந்திக்க இவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கட்டும்"

மாதங்கள் கழிந்தன. ஒருநாள் கைதிகள் இருவரும் ஸைபுல்லாவுக்கு முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். தனக்கு நியாயம் வழங்கப்படவில்லையென்றும் 'பழிக்குப் பழி' வாங்கியே ஆகவேண்டுமென்றும் கிஸான் பழைய பாடத்தையே திருப்பிப் படித்தான். ஸைபுல்லா பொறுமையிழந்தான்.

"நடுத்தெருவிலே இழுத்து விடுங்கள். இவர்களுடன் யாராவது பேசினாலும் இவர்களுக்கு உதவி செய்தாலும் தண்டனை விதிக்கப்படும் என்று நகரில் அறிவித்துவிடுங்கள். நன்றிகெட்ட நீசர்கள் திருந்துவதற்கு அதுதான் சிறந்தவழி."

ஆறுமாதங்கள் உருண்டோடின. ஸைபுல்லாவும் கிஸானை அறவே மறந்துவிட்டான். வேறு எவரும் அதற்குப்பிறகு பர்துவானில் கிஸான்தம்பதிகளைப் பார்த்ததில்லை.

ஸைபுல்லா நூர்ஜஹானுடைய தமக்கையின் ஏக புத்திரன்; நூர்ஜஹானின் மடியில் வளர்ந்து, ஜஹாங்கீரின் ஆதரவின்கீழ் லாகூர் அரண்மனையில் இருந்தவன்; வாலிபனான பிறகு வங்காளத்தின் சுபேதாராக நியமிக்கப்பட்டான்; அவனுடைய நிர்வாகத்தில் குறை கூற சக்கரவர்த்திக்குக்கூட இடமிருந்ததில்லை; சற்று கர்வியாக இருப்பினும், தூய்மையான வாழ்க்கையை நடத்தினான்; அவன் காலத்தில் கிஸான்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள், நிம்மதியுடன் இருந்து வந்தனர்.

எதிர்பாராத விதமாக ஸைபுல்லாவின் வாழ்க்கையில் சிக்கல் விழுந்தது. ஆறுமாதங்களுக்கு முன் ஒரு ஏழைக்கிஸானை அவனது மனைவியுடன் சாலையில் நிராதரவாய் தவிக்கவிட்டு விட்டான். ஷேர்ஷா சூரியின் ஞாபகார்த்தமான அந்தச்சாலை வழியே ஒரு குருடன் கூட லாஹூர் அடைந்து சக்கரவர்த்தியிடம்முறையிட முடியும். கிஸான் தன்னுடைய மனைவியுடன் லாஹூர் போய்ச் சேர்ந்தான்.

சில தினங்களுக்குப் பிறகு மலிகா நூர்ஜஹானுடைய கடிதம் ஸைபுல்லாவுக்குக் கிடைத்தது.

"ஒரு கிஸான் தன்னுடைய மனைவியுடன் வந்து நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று முறையிடுகிறான். இருவரும் உன்னுடைய மாகாணத்திலிருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது மகனே! சக்கரவர்த்தி ஏழைகள் விஷயத்தில் கொண்டிருக்கும் அக்கறையோ உனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு உன்னிடம் அப்பேர்ப்பட்ட குறைதான் என்ன?"

சக்கரவர்த்தியின் அதிருப்தியை நினைத்த மாத்திரத்திலேயே ஸைபுல்லா நடுங்கினான்.

"சிற்றன்னையே! அவர்கள் இருவரும் சக்கரவர்த்தியை சந்திக்க முடியாமல் பார்த்துக்கொள்ளுங்கள்"

ஸைபுல்லாவின் கடிதத்தைக் கொண்டு குதிரை வீரர்கள் லாஹூருக்கு பறந்து சென்றனர்.

மலிகாவிடமிருந்து ஸைபுல்லாவுக்கு பதில்கிடைத்தது. "நான் அவர்களை பலவாறாக சமாதானப்படுத்தினேன்; ஏராளமாக பக்ஷிஷ் கொடுத்து அனுப்பவும் முயற்சித்தேன்; ஆயினும் அவர்கள் போவதாகத் தெரியவில்லை. அரண்மனை மதில் ஓரமாக ரவி ஆற்றங்கரையில் கழுதைகள் போல் சுற்றிக்கொண்டிருக்கின்றனர்.

மலிகா எழுதியது முற்றிலும் உண்மையாயிற்று. வங்காளக் கிஸான் தன்னுடைய மனைவியுடன் ரவி ஆற்றங்கரையில் அலைந்து கொண்டிருந்தான். ஒரு நாள் மாலைவேளையில் சக்கரவர்த்தியின் உல்லாசப்படகு ஆற்றில் கம்பீரமாக வந்துக்கொண்டிருந்தது. சந்தர்ப்பத்திற்காக காத்துக் கொண்டிருந்த கிஸான் உரத்தக் குரலில் முறையிட்டான்.

"சக்கரவர்த்தியே! ஜஹான் பனாஹ்! நான் ஒரு ஏழை. வங்காள விவசாயி. எனக்கு நியாயம் வழங்க வேண்டும்."

அவனுடைய குரல் சக்கரவர்த்தியின் காதுக்கு எட்டியே விட்டது படகு கரையை நோக்கி வர ஆரம்பித்தது. ஜஹாங்கீரின் கம்பீரமான குரலைக் கேட்டு கிஸான் தலை வணங்கி நின்றான்.

"யார்? நியாயம் வழங்கும்படி ஜஹாங்கீரை, அழைப்பவர்கள் யார்?'

"ஜஹான் பனாஹ்! ஆதரவற்ற ஒருஏழை கிஸான். நியாயத்தைபெற வங்காளத்திலிருந்து தங்கள் சன்னிதானத்தைநாடி வந்துள்ளேன்." சொல்லிக்கொண்டே கிஸான் சக்கரவர்த்தியின் சமீபத்தில் சென்று விட்டான்.

"உன்னுடைய குறையென்ன?" சக்கரவர்த்தி பரிந்து கேட்டார். கிஸான் தன்னுடைய கதையை சொல்ல ஆரம்பித்தான். கேட்கக்கேட்க சக்கரவர்த்தியின் கண்கள் சிவந்தன. நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன. படகிலிருந்தவர்கள் நடுங்கினர். கிஸானும் அவனுடைய மனைவியும் வணங்கி நின்றனர்.

"உங்களுக்கு நியாயம் வழங்கப்படும்" சக்கரவர்த்தி உறுதி கூறினர். சில தங்கக்காசுகள் கிஸானுக்கு கொடுக்கப்பட்டன. படகு கம்பீரமாக திரும்பிற்று.

அரண்மனையை அடைந்தவுடன் விஷயத்தை விசாரித்தறிய சில உத்தியோகஸ்தர்கள் பர்த்வானுக்கு அனுப்பப்பட்டனர். விசாரணை நடத்தச்சென்ற உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு லாகூர் திரும்பிவந்து நடந்த உண்மைகளை ஜஹாங்கீருக்கு அறிவித்தனர். ஸைபுல்லாமீது எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் எல்லைகடந்த அன்பு. எனவே ஒவ்வொருவனுக்கும் ஜஹாங்கீரின் முடிவைப் பற்றிய கவலை இருந்தது.

கிஸானுடைய குழந்தை யானைக்காலில் சிக்கி இறந்ததும், கிஸானும் அவன் மனைவியும் சிறையில் வைக்கப்பட்டதும், நாடு கடத்தப்பட்டதும் சக்கரவர்த்தி மௌனமாய் கேட்டார். பிறகு ஸைபுல்லாவுக்கு உத்திரவு பிறந்தது.

"கிஸானுடன் நியாயமாக நடந்துகொள். அவர்கள் நிம்மதியாக வாழவழி செய். அரசர்கள் தினசரி வாழ்க்கைத் தேவைகளுக்கு கட்டுப்பட்டிருப்பதைப் போலவே நியாயத்துக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டியதவசியம். அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டியது உன்னுடைய பொறுப்பென்று நாம் நினைக்கிறோம். அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவேண்டிய பொறுப்பு உன்னைச் சேர்ந்தது."

நூர்ஜஹானுடைய நரம்புகளில் ஓடிக்கொண்டிருந்த ஈரானிய ரத்தம்தானே ஸைபுல்லாவின் நரம்புகளிலும் ஓடிக்கொண்டிருந்தது! சக்கரவர்த்தியின் உத்திரவைப் படித்ததும் ஸைபுல்லா பொங்கினான். "நான் நூர்ஜஹானுடைய தமக்கை மகனல்லவா! சக்கரவர்த்தியின் பிரதமமந்திரியினுடைய பேரனல்லவா! குழந்தைப் பருவத்திலிருந்து ஜஹாங்கீரின் மடியில் விளையாடியதும் சக்கரவர்த்தியுடன் பலமுறை சிம்மாதனத்தில் உட்கார்ந்ததும் கனவா! இரண்டு தரித்திரம் பிடித்த கிஸான்களால் என்னுடைய வாழ்க்கைப் போக்கை மாற்றிவிட முடியுமா?" என்று நினைத்தவுடன் ஸைபுல்லாவின் தலை கர்வத்தால் நிமிர்ந்தது.

கிஸானும் அவனுடைய மனைவியும் மாகாண எல்லையில் காலடி வைத்தவுடன் கைதுசெய்து சிறைக்குள் தள்ளும்படி உத்தரவிட்டான்.

பலமாதங்களுக்குப் பிறகு கிஸான் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டதாக ஸைபுல்லாவுக்கு செய்தி கிடைத்தது. ஸைபுல்லாவின் பூட்டுகள் தளர்ந்தன. மாகாணமெங்கும் தேடும்படி ஆட்களை நியமித்தான. கிஸான் கிடைக்கவில்லை. உடனே ஸைபுல்லா தன்னுடைய சிற்றன்னை நூர்ஜஹானுக்கு கடிதம் எழுதி அனுப்பினான்.

"அந்த கிஸான் சக்கரவர்த்தியை சந்திக்கும்படி ஆண்டவனுக்காக விட வேண்டாம்."

ஸைபுல்லாவின் கடிதம் போய்ச் சேருவதற்கு முன்னாலேயே அவனுடைய துரதிர்ஷ்டம் லாகூர் போய் சேர்ந்திருந்தது.

ஸைபுல்லா பயந்துபயந்து இருக்கவாரம்பித்தான். சாதாரணமான ஒரு கிஸானைப் பற்றி நான் ஏன்பயப்படவேண்டுமென்று எண்ணி மனதைத் தேற்றுவான்.

இரண்டு மாதங்களுக்குப்பிறகு ஸைபுல்லா முகல் தர்பாரில் ஆஜராகவேண்டிய கட்டம் வந்தது. ஸைபுல்லா தன் அந்தஸ்துக்கேற்ற ஆடம்பரங்களுடன் லாஹூர் போய்ச்சேர்ந்தான். நாட்கள் பல சென்றன. சக்கரவர்த்தியை பேட்டிகாண ஸைபுல்லா விண்ணப்பித்தான்.

"நாளை காலை ரவி ஆற்றங்கரையில் பேட்டி கிடைக்கும். என்னுடைய அன்புக்கு பாத்திரன் என்ற முறையில் இன்றையஇரவு ராஜபோகத்துடன் கழிக்க ஸைபுல்லாவுக்கு அனுமதி உண்டு" என்று சக்ரவர்த்தியின் பதில் கிடைத்தது.

ஸைபுல்லா மனவேதனை அடைந்தான். அவனுடைய கர்வம்சுக்கு நூறாயிற்று. சாதாரணமான மனிதனுக்கு பேட்டியளிப்பதுபோல் ரவி ஆற்றங்கரையில்

# கையூம்கானைவிட டாக்டர்கான் உயர்ந்தவர்.

## பர்தா ஆதரவுக்கு சிறை தண்டனை.

### பாகிஸ்தான் பத்திரிகை வெளியிடும் தகவல்.

25—5—48—லாகூர்

மோசிகேட் பார்க்கில் நடந்த தொண்ணூறாயிரம் பேரடங்கிய கூட்டத்தில் பீர்மான்கி ஷரீப் தன்னுடைய அகில பாகிஸ்தான் ஷரீயத் கட்சியின் லட்சியங்களை கீழ்வருமாறு விளக்கினர்:—

" மதத்திலிருந்து அரசியலை தனியாக பிரிக்க முடியாதென்று சொல்லி 1940ம் வருஷ முஸ்லிம்லீக் கூட்டத்தில் பாகிஸ்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இன்று பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலாய் இருக்கும் மிஸ்டர் முகம்மதலி ஜின்னா அன்று முஸ்லிம் லீக் தலைவராய் இருந்தார். லீகில் சேரும்படி எனக்கு எழுதிய கடிதங்களில் பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி அமைக்கப்போவதாக மிஸ்டர் ஜின்னா உறுதி அளித்திருக்கிறார். அரசியல் தொடர்பற்ற என்னைப்போன்ற பக்கீர்களும், ஆசிரமத்தைவிட்டு வெளியே வந்ததற்கு இஸ்லாமிய ஆட்சியின் ஆசையே காரணம். பாகிஸ்தான் ஏற்பட்டதிலிருந்து இஸ்லாமிய அடிப்படையில் அரசியல் திட்டம் தயாரிக்கத்தொடங்கும் நன்னாளை எதிர்பார்த்திருந்தேன்."

' அரசியல் நிர்ணயசபை தலைமைப் பதவியும், கவர்னர்ஜெனரல் உத்தியோகத்தையும் ஏற்றுக் கொண்ட பிறகு மிஸ்டர் ஜின்னா எல்லா பிரச்னைகளிலும் நடுநிலைமை வகிக்கும் இங்கிலாந்து அரசரைப் போல் இருக்கிறார்............"

---

வங்காள சுபேதாருக்கு சக்கரவர்த்தி பேட்டியளிப்பார்! கச்சேரிகளுக்காக ஏற்பாடு செய்யும்படி ஸைபுல்லா உத்தரவிட்டான். பக்க வாத்திய முழக்கமும் சலங்கை ஓசையும் சக்கரவர்த்தியின் அரண்மனை மதில்களில் இரவெல்லாம் எதிரொலித்தது.

சூரியன் உதயமானவுடன் ஸைபுல்லா முதல்தரமான ஆடைகளால் தன்னை அலங்கரித்துக்கொண்டு சக்கரவர்த்தியை எதிர்கொண்டு அழைக்கப் புறப்பட்டான்.

படைகள் புடைசூழ சக்கரவர்த்தியின் யானை கம்பீரமாய் ஆடி அசைந்துகொண்டு அரண்மனை வாயிலைவிட்டுக் கிளம்பிற்று. பட்டத்து யானைமீது அரசனுக்கு பதில் வங்காள ஏழைகிஸான் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஸைபுல்லா கூர்ந்து கவனித்தான்.

சக்கரவர்த்தி சாதாரண உடையில் நடந்துவந்து கொண்டிருந்தார் ஸைபுல்லாவின் சிப்பாய்கள் அணிவகுத்து நின்றனர். சக்கரவர்த்தியின் வருகைக்காக ஸைபுல்லா முழங்கால் மண்டியிட்டு தலைவணங்கி காத்துக் கொண்டிருந்தான்.

ஜஹாங்கீரின் முகத்தில் மரணத்தின் தீர்மானமான உறுதி குடி கொண்டிருந்தது. பக்கத்தில் வந்தவுடன் ஸைபுல்லாவை சுட்டிக்காட்டி ஸைபுல்லாவின் சிப்பாய்களுக்கு உத்தரவிட்டான்.

" இவனை பிடித்துக்கட்டுங்கள் " சிப்பாய்கள் தங்கள் காதுகளையே நம்பவில்லை. பிரமிப்படைந்து கற்சிலைகளைப் போல் அசையாமல் நின்றனர்.

" இவனைப் பிடித்துக்கட்டுங்கள் " ஜஹாங்கீர் மறுபடியும் கர்ஜித்தான். உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

" அவனைத் தள்ளி பூமியில் படுக்க வையுங்கள் " ஜஹாங்கீரின் இரண்டாவது உத்திரவு.

ஸைபுல்லா ஒன்றும் பேசவில்லை. சிப்பாய்கள் தங்களுடைய சுபேதாரையே தள்ளி புழுதியில் படுக்கவைத்தனர். பட்டத்து யானை அசைந்து கொண்டு முன்னேறிற்று. மலிகாவின் தமக்கைகுமாரனைப்பார்த்ததும் மாவுத்தன் யானையை வேறுபக்கத்தில் திருப்பினான்.

" உத்திரவை மீறினால் மரண தண்டனை " அரசனுடைய குரல் ஒலித்தது.

......தன்னுடைய வழியில் கிடந்த முள்ளை யானை அகற்றிவிட்டது.

சவ ஊர்வலம் அரண்மனையிலிருந்து புறப்பட்டபோது ஜஹாங்கீர் வெறுங்காலுடன் கூட நடந்தார். சவ அடக்கத்துக்குப் பிறகு மூன்று நாள்வரை ஆட்சி முழுவதிலும் ஸைபுல்லாவின் துக்கம் கொண்டாடப்படவேண்டும் என்று ஜஹாங்கீர் உத்திரவிட்டார்.

அந்தப்புரத்தை அடைந்தபோது கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓட ஜஹாங்கீர் பேசினார் " நான் அவனை என்னுடைய குமாரனைப்போல் நேசித்தேன் மலிகா.! "

"பாகிஸ்தான் இஸ்லாமிய புனிதப்போராட்டம் என்று மிஸ்டர் ஜின்னா என்னை நம்பும்படிச் செய்தார். என் சொந்த செலவில் சுற்றுப் பிரயாணம் செய்து எல்லைப்புறத்தில் செஞ்சட்டைப் படையினர் கிளர்ச்சியை முறியடித்தேன். இன்று எல்லைப் பிரதமராய் இருக்கும் கான் அப்துல் கையூமைவிட தனிப்பட்ட முறையில் டாக்டர் கான்சாகிப் எவ்வளவோ உயர்ந்தவர். இருந்தும் இஸ்லாமிய ஆட்சியின் ஆசையில் அவரை எதிர்த்தேன். பொதுஜனவாக்கெடுப்பில் வெற்றி கிடைத்து பாகிஸ்தான் அமைந்துவிட்டது. "எல்லையற்ற தியாகங்களுக்குப்பிறகு பாகிஸ்தான் கிடைத்திருக்கிறது. பீஹார், கிழக்குபஞ்சாப், முஸ்லிம்கள் இஸ்லாமிய ஆட்சிக்காக மாபெரும் தியாகங்கள் செய்திருக்கின்றனர்."

"துரதிர்ஷ்டவசமாக இன்று ஷரீயத்தை சட்டமாக்குவதில் சால்சாப்பு செய்யப்படுகிறது மக்கள் ஆட்சிக்கு பதில் எதேச்சாதிகாரத்தில் முனைந்திருக்கின்றனர். ஆகையால் ஷரீயத் ஆட்சிஏற்படுத்துவதற்காக அகில பாகிஸ்தான் ஷரீயத் கட்சி ஏற்படுத்தியிருக்கிறேன். இஸ்லாமிய ஆட்சிமுறையை ஆதரிக்கும் அனைவரும் அதில் சேர்ந்து அதிகாரவர்க்கத்தை நிர்ப்பந்திப்பதே அதன் நோக்கம்"

"மௌல்விகளும், பீர்களும், அதிகாரத்துக்குவர முயற்சிப்பதாக சிலர் சொல்லுகின்றனர். இன்றைய லீடர்களை உண்மையான மௌல்விகளாக மாற்றவே முயற்சிக்கிறோமென்று அவர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். பாகிஸ்தான் ஏற்பட்டபிறகு எனக்கும் ஒரு மந்திரி பதவி சமர்ப்பிக்கப்பட்டது. வேண்டாமென்று உதறித்தள்ளி விட்டேன். இஸ்லாமிய ஆட்சி அமைந்த பிறகும் பதவி ஏற்கப்போவதில்லை என்று உறுதி கூறுகிறேன்."

"இன்றைய கஷ்டங்களுக்கெல்லாம் மதங்கெட்ட ஒழுக்கமிழந்த, தகுதியற்ற, லஞ்சம் வாங்கும் நிர்வாகிகள் காரணமல்ல இஸ்லாமுக்கு மாறான ஆட்சிமுறையேதான் காரணம். இன்றைய ஆட்சி முறையில், நான் அதிகாரத்துக்கு வந்தாலும், இவ்வித ஊழல்கள், எனக்குள்ளும் ஒருக்கால் புகுந்து விடக்கூடும்."

"இஸ்லாமிய சோஷலிஸம், கம்யூனிஸம் என்று கோஷிப்பவர்கள் பொய்யர்கள். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசத்தைப்போக்க இஸ்லாமால் முடியுமேயொழிய கம்யூனிஸத்தால் அல்ல. இன்று ரஷ்யாவில் ஸ்டாலினுடையவீடும் வாழ்க்கைதரமும் ஒருசாதாரண ஏழைத்தொழிலாளியைப்போலில்லை. ஆனால் நபி அவர்களும், கலீபாக்களும் நடத்திய எளிய வாழ்க்கை எந்த ஒருஏழைபிரஜையின் வாழ்க்கைதரத்தையும்விட உயர்ந்ததாயிருக்க வில்லை. ஆகையால் நாம் இஸ்லாமையே விரும்புகிறோம். இஸ்லாமிய சோஷலிஸம் நமக்கு வேண்டாம்."

"இன்றைய தலைவர்களுக்கு தகுதியோ தீர்க்க தரிசனமோயில்லை. கிழக்கு பஞ்சாப், காஷ்மீர் விஷயத்தில் என்னுடைய யோஜனையை அவர்கள் ஏற்கவில்லை. ........அவர்கள் மீது குற்றம் சாட்ட நான் விரும்பவில்லை. தங்களுடைய முட்டாள்தனமான முடிவுகளுக்கு சமூகத்தையே பலியிட முற்படுகையில் அவர்களைத்தடுத்து நிறுத்துவதற்காக முஸ்லிம் லீகில் பொதுஜன அபிப்பிராயத்துக்கு செல்வாக்கு இருக்கும்படி செய்யவே விரும்புகிறேன். ........."

"கலீபா உமர் கத்தாப் அவர்களை ஆட்சேபிப்பது சாத்தியமாக இருந்திருக்கையில் பொதுமக்கள் இந்தப் பேர்வழிகளை கண்காணிப்பது ஏன் சாத்தியமில்லை?"

பிறகு அப்துல் சர்தார் நயாஸி கீழ்வருமாறு பேசினார்.

"ஆங்கிலேயர்கள், ஹிந்துக்கள், சீக்கியர்களை எதிர்ப்பதற்காகவென்று முஸ்லிம்கள் இன்றைய தலைவர்களை தற்காலிகமாகவே தேர்ந்தெடுத்திருந்தனர். சுதந்திர போராட்டத்திலீடுபட்டு மௌலானா முகம்மதலி, மௌலானா ஜபர் அலிகான், மௌலானா ஹஸ்ரத் மோஹானி போன்ற பெரியார்கள் சிறைக்கூடங்களில் திருவை சுழற்றிக்கொண்டிருந்த போது இவர்கள் டோரி வெள்ளையர்களுடன் சேர்ந்து கொண்டு துரோகங்களைச் செய்து நேர்மையற்ற முறையில் ஜாகீர்கள், பட்டம், பதவிகள் பெறுவதில் ஈடுபட்டிருந்தனர். அதை வைத்துக்கொண்டு இன்றைக்கும் முஸ்லிம் லீகை தங்கள் பாட்டன் சொத்தாக்கப் பார்க்கின்றனர்."

"ஆங்கிலோ முஹம்மடன், நவாப்கள், முதலாளிகளிடையே, முஸ்லிம் லீக் பதவிகள் வினியோகிக்கப்பட்டு வந்ததால் முஸ்லிம் லீக் இதுவரை மக்கள் ஸ்தாபனமாக மாற முடியவில்லை. புதிதாக அமைக்கப்படும் பாகிஸ்தான் முஸ்லிம் லீகிலும் அதேகுறை இருந்து வருகிறது. எனவே பஞ்சாபில் பாகிஸ்தான் முஸ்லிம்லீக் கிலாபத் கட்சி ஏற்படுத்தி முஸ்லிம்லீகை மக்கள் ஸ்தாபனமாக மாற்ற வழிசெய்யப்பட்டிருக்கிறது. ஆங்கிலோ, முஹம்மடன், நவாபுகள், முதலாளிகள் ஆதிக்கத்தை தகர்க்க அதில் ஏராளமாக முஸ்லிம்கள் சேரவேண்டும். அங்கத்தினர்களாக சேருவது மட்டும் போதாது. இஸ்லாமிய ஆட்சியின் ஆதரவாளர்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பும் அவசியம்"

"முடிவில் பாலஸ்தீனத்துக்கு அனுதாபம் தெரிவித்தும் இஸ்லாமிய ஆட்சியை அமைக்கும்படி கோரியும், பர்தாமுறையை ஆதரித்த குற்றத்துக்காக விசாரணையின்றி சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அன்ஜுமனே ஸீரத்-எ இஸ்லாம் தலைவர் மௌல்வி அலமுத்தீன் அவர்களை விடுதலை செய்யும்படி வற்புறுத்தியும், தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன"

["ஆஸாத்" தினசரி லாஹுர்.]

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.